5.283

உ

கடவுள் துணை.

யாகோபு திருவாய்மலர்ந்தருளிய

தண்டகம்-ஈஅ.

வைத்தியசூத்திரம்-ருரு

இடைபாகம்—ஙசு செய்பாகம்—ஙசு

இவை

மதுரை யானைக்கல்தெரு வித்துவான்

மு. குழந்தைவேலுப்பிள்ளை யவர்கள்

ஏட்டுப்பிரதியின்படி,

மதுரை வித்துவான்

த. குப்புசாமி நாயுடவர்களால்

பரிசோதிக்கப்பெற்று:

மதுரை, ஸ்ரீராமச்சந்திர விலாசம் பிரஸ், புரொப்ரைட்டர்

புதுமண்டபம் புஸ்தகஷாப்

இ. ராம.

குருசாமிக் கோனர்

அவர்களால்

Printed at the

Manonmony Vilas Press, Northmasi Street, Madura.

1927.

Registered Copy Right.

விலை] [அணை 12.



கடவுள் துணை.

யாகோபு திருவாய்மலர்ந்தருளிய

தண்டகம்—ஈரைம்.



ஆதியே அண்டபிண்ட மருளே காப்பு
ஆகாச ஞதசத்தி அறிவே காப்பு
சோதிமணி விளக்கொளியின் விந்து காப்பு
சொற்பெரிய நபிமார்கள் பாதங்காப்பு
நீதிமறை வேதகுரு பாதங் காப்பு
நித்தியநி ராமயமாய் நிறைந்தோன் காப்பு
பாதிமதி யிரவிதனை அணிந்தோன் காப்பு
பரப்பிர்ம சொரூபத்தின் பாதங் காப்பே. (1)

பாதமென்ற பதியறிந்தேன் பரத்தினலே
பராபரத்தின் பொருளறிந்தேன் குருவினலே
வேதமென்ற கருவறிந்தேன் அண்டத்தாலே
வேதாந்தத் தாயறிந்தேன் பிண்டத்தாலே
நாதமென்ற தசநாத மதியினலே
நாதாந்த ரவியினுட விவேகத்தாலே
காதமில்லை தூரமில்லை பூர்ணத்தாலே
கண்டறிந்த யாகோபு கருவாய்த்தானே. (2)

கருவான நாதமென்றும் விந்துவென்றும்
கருத்தில்மனக் கசடதென்று மருள்தானென்றும்
அருவான அண்டமென்றும் பிண்டமென்றும்
ஆகாச பரப்பிர்ம சொரூபமென்று
மருவான மதியென்றும் ரவிதானென்றும்
மகத்தான கேசரியின் மகிமையென்றும்
தருவான தாரணியில் தலைப்பெண்ணென்றும்
தான்பயங்கித் திரிவார்கள் சண்டிமாடே. (3)

திரிவார்கள் தேசத்தி லனேகம்பேர்கள்
செயலான பலபிணியின் கருவைக்காணார்
அறிவார்கள் அறிவாலே குருவின்பீடம்
ஆனந்த சற்குருவின் கருவின்பீடம்
தெரியாம லிலேவார்கள் என்றேசொல்லி
சிறப்பான நபிமார்கள் வெகுபேர்கூடி
குறிப்பாக தண்டகமாய்ச் சொல்லென்றார்கள்
குருவாக அன்னளித் சொன்னேனானே. (4)

அன்னளில் யான்றனும் ராமதேவ
ராயிருக்குங் காலமதி லாயிரந்தான்
முன்னகப் பெருநூலாய்ச் சொல்லிவிட்டேன்
மூடிவாகத் தெரிந்தோனே சித்தனுவான்
இன்னளித் தண்டகந்தான் சொல்லவென்றால்
இயல்பா யாயிரத்தைவிட வேறென்றில்லை
சொன்னலு மதைக்குறுக்கிச் சொல்லவேண்டும்
சொல்லகன்று போகர்யாக் கோபுதானே. (5)

அகன்றுபோஞ் சின்மயத்தின் பொருளேக்காண
அரகரா யாராலு மூடியுமோசொல்
திகன்றுபோஞ் சிதம்பரத்தின் பொருளேக்கண்டால்
தேவாதி தேவர்களு மீடாவாரோ
புகன்றுனக்குத் தண்டகத்தின் கருவையெல்லாம்
போக்கோடே சொல்லுகிறேன் புகழாய்க்கேளு
இகன்றுபேர் வரையாறுந் தாண்டும்யாகோப்
ஏரண்டம் பேரண்டம் ஏறினேனே. (6)

ஏறினேன் ஆறுவரை யடக்குங்கண்டேன்
ஏகாச்ச ரத்தினுட பொருளுங்கண்டேன்
மாறினே னேம்பத்தோ ராச்சரத்தில்
மகத்தான ஒளிகண்டேன் வெளியுங்கண்டேன்
சீறினேன் பதினெண்பேர் முறையுங்கண்டேன்
சிறப்பாகத் தண்டகத்தின் கரையுங்கண்டேன்
தேறினேன் அனேகநூல் யாக்கோப்சொன்னேன்
தேவியென்ற வாலையைத்தான் தெரிசித்தேனே. (7)

தெரிசித்தேன் சபையாறுஞ் சுற்றிக்கொண்டேன்
தெண்டகத்தை மறையாமற் சொல்லிவிட்டேன்
அரிசித்தே னருள்சார்ந்த பஞ்சகர்த்தாள்
ஐவரையும் பூசித்தேன் அருமையாக
பரிசித்தேன் பஞ்சவர்க ளோந்துபேரைப்
பணிந்திட்டேன் சிரசுமுடி பாதங்கண்டேன்
வருசித்தேன் பற்பநதி கங்கையாடி
மகத்தான யாக்கோபு மகத்வம்பாரே. (8)

பாரப்பா பெருநூலின் கருக்களெல்லாம்
பார்தனிலே ஆரறியப் போறாரப்பா
சீரப்பா தண்டகமா மிந்நூல்தன்னில்
செகமாய்கை யைவிலக்குஞ் சூட்சாசூட்சம்
தோரப்பா யிந்நூலின் பொருளைக்கண்டு
செகந்தனிலே மானிடர்க்கு யாக்கோப்சொன்னேன்
ஆரப்பா அறிவார்கள் தண்டகத்தை
அவனிதனில் மெய்ஞ்ஞானி அறிவார்தாமே. (9)

ஆமப்பா பராபரத்தின் மகிமையாலே
ஆதிசிவ நாதவிந்து அகண்டு மீறி
வாமப்பா கேசரத்தில் மனதைக்கொண்டேன்
மகத்தான பூரணத்தில் மோட்சம்பெற்றேன்
காமப்பா நாதவல்லி காமரூபி
கைக்கொண்டாள் கேசரியின் கருவைச்சொன்னுள்
சோமப்பா லெனக்களித்தாள் வாமரூபி
சொல்லிவிட்டே னுயிரதில் வெளியாய்த்தானே. (10)

வெளியாக அகாரவுகா ரத்தைக்கண்டேன்
வேதாந்த ஓங்கார மூன்றேமூலம்
ஒளியாகப் பரங்கண்டேன் பரவெளியுங்கண்டேன்
ஓகோகோ அமூர்தநதி துரியங்கண்டேன்
அழியாத ஆதார நிலையுங்கண்டேன்
அப்பாலும் பற்பநதி சுழியுங்கண்டேன்
வழியான ஆறுவரைப் பூட்டுங்கண்டேன்
மகத்தான தசதீட்சை வளங்கண்டேனே. (11)

கண்டேனே சிவதீட்சை சத்திநீட்சை
கதிதருநற் திதீட்சைக் கருளும்பெற்றேன்
பெண்டான மவுனசிவ யோகம்பெற்றேன்
பேரான அஞ்செழுத்தின் விபரம்பெற்றேன்
தெண்டான திசைநாத பீடம்பெற்றேன்
தெளிவான பூரணத்தின் கிருபைபெற்றேன்
தொண்டரா யிருந்துமே வரமும்பெற்றேன்
சுகமாக யாகோபு தலங்கண்டேனே. (12)

தலமான ஆறுதலப் பூட்டுங்கண்டேன்
சற்குருவா லதைத்திறக்க அறிவுங்கண்டேன்
வலமான சிவசத்தி பூசைகண்டேன்
மகத்தான சஞ்சார சமாதிகண்டேன்
பெலமாம்பே ரண்டம்யே ரண்டங்கண்டேன்
பேரொளியின் வரலெனை மணியைக்கண்டேன்
குலமான நாலுவகைச் சாதிகண்டேன்
குருவிருக்கு மாயிரத்தெட் டிதழ்கண்டேனே. (13)

உருவான பொருளறிந்தேன் யாக்கோபென்பேர்
ஓகோகோ ஒருவரார் காணப்போமோ
சுருவான சூட்சமடா சொரூபானந்தம்
சூட்சசடா தாரத்தின் பீடஞ்சொல்வார்
அறிவான ஆதியப்பா ஆதியந்தம்
அகண்டவெளி துரியமடா துரியாதீதம்
கருவான காமியடா வாலைப்பெண்ணைக்
கண்டேனே பிண்டமதின் கருச்சொன்னளே. (14)

சொல்லியவள் யாக்கோபு யெனக்குத்தானும்
சொற்பெரிய அமூர்தமதைச் சொரிந்தாளாத்தாள்
வல்லியவள் காமிசிவ காமிரூபி
வரங்கொடுத்தாள் தன்னருளால் வாங்கிக்கொண்டேன்
மெல்லியவ ளுபதேசஞ் சொன்னளாத்தாள்
விவேகமுள்ள கருவறிந்து அஞ்ஞானத்தை
சல்லியகை பாகஞ்செய் பாகஞ்சொன்னள்
சதாகோடி வித்தையெல்லாம் ஆடினேனே. (15)

ஆடினேன் திருநடனந் தண்டகமாமிந்த
ஆயிரத்தின் சூஸ்திரத்தைப் பதனம்பண்ணு
பாடினே னபிமார்கள் கிருபையாலே
பண்பாக யானிகண்டு பாடினேன்பார்
தேடினேன் மவுனசித்துப் பாஷைதண்னைத்
தீர்க்கமாய்த் தெரிந்தபின்பு தெளிவாய்ப்பேசி
டினேன் சூஸ்திரத்தை வெளியில்விட்டேன்
சொற்பெரிய சித்தரையு மயக்கும்பாரே. (16)

பாரேநீ யிந்நூலை யுற்றுப்பார்த்தால்
பலதொழிலின் சூட்சமெல்லாம் வெளியாய்த்தோணு
மாரேநீ மந்திரங்கள் சக்கரங்கள்
மகத்தான தசதீட்சை மவுனக்கியானம்
தேரேநீ குருவழியை மூப்புச்சுண்ணம்
சிறப்பான சமாதிகர்ப்பம் செய்கீர்பாகம்
காரேநீ காயாதி கற்பத்தோடு
கனகுளிகை செந்தூரங் கருவதாமே. (17)

ஆமப்பா அஷ்டமா சித்துத்தானும்
அளவறந்த மைதிலதம் வசியத்தோடு
வாமப்பா அஞ்சனமூ மாற்றந்தானும்
மகத்தான மெழுகினுட குருவின்கூறும்
வேமப்பா வேதையென்ற சரக்கின்கூறும்
விளம்பினார் யாகோபு விபரந்தோடே
நேமப்பா நிஷ்டையுடன் சிவயோகந்தான்
நிகரில்லா ஞானமொடு நேர்மைதானே. (18)

தானவனுய் நின்றவர்க்கே யெய்துமெய்தம்
தாரணியி லிலைவார்க்குப் பலியாதப்பா
நீனேநா னென்றுசொல்லி லோகமாண்பர்
நீணிலத்தில் மெத்தவுண்டு நிகழ்த்தவென்றூல்
வாயேதான் திறவாமல் மவுனங்கொண்டு
வையகத்தோ ரைமயக்கி மாண்டார்கோடி
ஆயோகன் சொன்னபடி குருவிடத்தில்
அனேகநாள் தொண்டுபண்ணி அருள்காண்பாயே. (19)

மந்திரம்.

அருளான பொருளென்ற மாந்திரீகம்
அப்பனே சொல்லுகிறேன் உற்றுப்பாரு
மருளான மவுனமப்பா மூலாதாரம்
மகத்தான தம்பனமா மதிதவித்தை
விருளான மேலாறு வரைகள்கீறி
மெய்ஞ்ஞானக் குறுக்காறு வரையுங்கீறி
தருளான யிருபத்தஞ் சரையுமாச்சு
சமத்தாக மநயவசி யென்றுபோடே. (20)

போட்டவுடன் சொல்லுகிறே னின்னங்கேளு
புகழாக நாதசத்தி பீஜமாறு
ஆட்டமுடன் ஆடுமப்பா அறீம்இறீம்என்று
அம்மம்மா மறீமென்று உயிரெழுத்தின்பீஜம்
தாட்டமுடன் அவ்வும்உவ்வும் ஐயுமென்று
சார்பாகக் கிலியுஞ்செளவும் என்றுமாறு
வாட்டமுடன் தேகம்பதி னெட்டுமூன்றும்
வளமாக யிருவட்டங் கீறிக்காணே. (21)

காணப்பா அஷ்டதுர்க்கை அஷ்டநாகம்
கருவான துவாரபாலர் கள்தன்பீஜம்
பேணப்பா நாதவிந்து பீஜமாறும்
பேரான மகாரமென்ற மவுனம்போடு
ஆணப்பா ரேகையென்ற யிருபத்தொன்றும்
அகாரமென்ற உகாரவரை மகாரம்போடு
நாணப்பா நகாரமென்ற சிகாரத்தோடு
நடுவிணையைப் பிடித்துநீ மாறுமாறே. (22)

மாறுவாய் மவுனமென்ற யோகதீட்சை
மகத்தான நாதாக்க ளாருஞ்சொல்லார்
ஏறுவா யோகத்தி லிருக்கும்போது
ஏகமாய்ச் சக்கரத்தை வரைந்துகொண்டு
பேறுவாய் மவுனமென்ற யெழுத்தைமாறி
பெட்புடனே கற்பூரத் தீபங்கொண்டு
ஆறுவாய் வாயுவென்ற மூலாதாரம்
அப்பனே கும்பித்தோர் நிலையாய்நில்லே. (23)

நில்லெனவே நாளொன்றுக் கிருநேரமப்பா
நேர்மையுடன் தம்பித்தால் நிற்குணமுந்தோற்றும்
வல்லெனவே வாயுவென்ற பீடந்தோற்றும்
மகத்தான சபையாறு மடவாய்க்காணும்
புல்லெனவே பூரணத்தின் சோதிகாணும்
புகழ்பெரிய மனக்கண்ணே ஒட்டிப்பார்த்தால்
தல்லெனவே தூரியமென்ற தூரியாதீதம்
தோன்றியே யாகோபு பூசிப்பாரே. (24)

பூசிப்பாய் மவுனசிவ யோகதீட்சை
புகழாக ஒருநாழிதம் பித்தாக்கால்
ஆசிப்பாய் கவவுபோலங்கே காணும்
அரனிருக்கும் விந்துநிலே வீடுங்காணும்
ஓசிப்பா ரொடுக்கநிலே பீடங்காணும்
ஓங்கார தலத்தம்பம் பரத்துநேர்மை
தாசிப்பார் கருவிகாணுதியான
சடாதாரப் பொருள்காணுஞ் சார்ந்துபாரே. (25)

பாரப்பா தம்பனத்தை ஒட்டிப்பார்த்தோம்
பாபரமாந் தரிசனத்தை உடனேகண்டோம்
நீரப்பா நிராதார பூரணத்தில்
நெடுநாளாய்ப் பூசித்தோம் பரங்கண்டோம்நாம்
ஆரப்பா அறிவார்கள் வாயுஸ்தம்பம்
அன்பாக யானறிந்தேன் சத்தியாலே
நேரப்பா அஷ்டகர்ம வித்தைதானும்
நிலையாகக் காண்பாரோ மனிதர்தாமே. (26)

மனிதருக்கு மனோன்மணியுஞ் சொல்லுவாளோ
மணிமந்த்ர ரூபியவள் மனமகிழ்ந்து
அனிதமுட னருகில்வந்து யாகோப்பென்று
அஷ்டகர்ம மின்னதென்ற அருளைக்காட்டி
வனிதமுடன் வாயுவென்ற தம்பனந்தான்
மைந்தனே உந்தனக்கு வாச்சுதப்பா
கனிதமுடன் குருவாந்தம் பனத்தைச்சொன்னேன்
கருவான சிதம்பரத்தின் தியானங்கேளே. (27)

கேளப்பா தண்டகத்தின் மகிமைதன்னைக்
கிருபையுடன் பெருஞ லாயிரத்திலப்பா
ஆளப்பா ஆயிரத்தெட் டிதழுக்குள்ளே
அரனிருந்த பரமப்பா ஆர்தான்சொல்வார்
வாளப்பா ஆயிரத்தை சுருக்கியாக்கோப்
வசனித்தே னதைக்குறுக்கி நூற்றுப்பத்தில்
தேளப்பா கொட்டுதல்போற் சொல்வோமப்பா
சிதம்பரத்தின் மகிமையுட திறந்தான்காணே. (28)

சிதம்பரச்சக்கரம்.

காணப்பா சிதம்பரச்சக்கரத்தைச் சொல்வோம்
காசினியில் ஞானிகளும் உன்னிக்காணூர்
ஆணப்பா அதீதசூத் திரந்தானிந்த
ஆனந்த நடனஞ்செய் சுருக்கமப்பா
வாணப்பா வரைபாறு மேலாறுங்கீறி
மகத்தான ரேகையது வலமாய்க்கீறி
ஏணப்பா யிருபத்தைந் தரைக்குமிந்த
இடம்வலமாய் ரேகையது யேகம்போடே (29)

போடப்பசிவய நமவென்று போடு
புகழாகச் சித்திக்கும் பேருண்டாகும்
ஆடப்பா அறுபத்து அஞ்சுரேகை
ஐம்பத் தோரச்சரத்தின் பீஜமாறு
தேடப்பாவய நமசிறீம் கிறீம்சிங்கிலியும்
திறமாகக் கிளுங்கிறியும் செளவும்போடு
மாடப்பாமசிவய நமறீம் உறீம்மென்று
மகத்தான அவ்வும் உவ்வும் மாறுமாறே. (30)

மாறப்பா நயவசிம வென்றுமாறு
மகத்தாக யாக்கோபு அறிந்தவித்தை
வாறப்பாவசிம நயவென்று போடு
வளமாகச்சதுரவரை கீழ்மேற்போடு
ஆறப்பா அஷ்டதற்கை அஷ்டசத்தி
அஷ்டமா காளியுடன் அஷ்டநாகம்
தீறப்பதிசை மூலந்துவார பாலர்
றீங்றீங்றீங் அறீங்கென்று போட்டுப்பாரே. (31)

அறீங்கென்று அச்சாமாம் றீங்காரம்பேரடு
அங்கென்ற வங்கதிலேகிறீ மென்றேசொல்
பங்கென்றமூல மப்பாறீங் காரம்போடு
பரமென்ற பராபரமாம் சவ்வுங்கூட்டி
மங்கென்ற பீஜமதில் மவ்வும்போடு
மகத்தான சிதம்பரத்தின் மகிமைபாரு
எங்கள்குலம் ஆதியிலே மரவரப்பா
இப்போது யாக்கோபாயிருந்தோம் பாரே. (32)

பாரப்பாசிதம் பரசக்கரத்தை நாமும்
பாடினேந் தண்டகத்தில் பரிவாய்க்கேளு
ஆரப்பா அறிவார்கள் ஆதியந்தம்
அம்பரத்தின் நடனவொலி ஞதஓசை
சேரப்பா செயகண்டி சங்குநாதம்
ஜெய பேரிடமார ஒலிதாளந்தாரை
காரப்பா தும்துமியின் நாதத்தோடு
கடாச்சிப்பாய் சிதம்பரத்தைப் பூசிப்பாயே. (33)

பூசிப்பாய்ச் சிதம்பரசக்கரத்தை மைந்தா
புகழாகவில்வத் தாற்பூசிப்பாய்நீ
ஆசிப்பாய் ஆயிரத்தெட்டித ழாமைந்தா
அகண்டமென்ற மண்டலத்தி லாறுஞ்சித்தி
பாசிப்பயர் சர்க்கரையுந் தேங்காய்ப்பாலும்
பாயாசம் பலகனியும் படைத்துமைந்தா
நாசிப்பாய் நவசித்தர் மூலமப்பா
நான்வெளியாய்ச் சொல்லிவிட்டேன் முத்திதானே. (34)

முத்தியிந்தச் சிதம்பரத்தில் மோட்சமோட்சம்
முக்கியமாய்ச் சொல்லிவிட்டேன் செய்துபாரு
சித்தியிந்தச் சிதம்பரத்தின் பாகமெல்லாம்
செயமானமுன்னூலே யெடுத்துப்பாரு
அத்தியென்ற அகஸ்தருளா லின்னூல்தானில்
ஆடலாங் கோடான கோடிவித்தை
புத்தியுடன் யாக்கோபு திறந்துசொன்னேன்
பொல்லாத காழுகர்க்கு வாயாதென்னே. (35)

என்னவே சிதம்பரசக்கரத்தைச் சொன்னேன்
இயல்வாலை சக்கரத்தை யினிமேற்கேளு
அன்னவே அறுகோண மிட்டுத்தீரு
அரகரா அதுநடுவில் முக்கோணந்தீரு
வன்னவே நாற்சவுக்கம் வரைகள்போடு
மகத்தான யெண்கோணஞ் சுற்றிக்கீறு
ஒன்னவே ஒருவட்டஞ் சுற்றிப்போடு
ஓங்கார வட்டமாம் வரைபத்தாமே. (36)

ஆமப்பா வரையுள் பனிரெண்டாய்க்கீறு
அப்பனே நாற்பத்தி மூக்கோணவீடு
வாமப்பா-வடபக்க மூக்கோணத்தில்
மவ்வும்உவ்வும் அவ்வுமென வகையாய்மாறு
தேமப்பா தென்பக்கம் அறுகோணத்தில்
சிறீம்ஹ்ரீம் சிங்ஒமென்று தெளிவாய்ப்போடு
நாடப்பா சொல்லிவிட்டோம் ரங்மங்கென்று
நாதாக்க ளாருந்தான் சொல்லார்பாரே. (37)

பாரப்பா நாற்சவுக்கம் வரையிலேதான்
பரப்பிர்ம சுரூபமென்ற மகாரம்போடு
ஆரப்பா உனக்கீடு ஒருவருண்டோ
ஆச்சரிய மாச்சரிய மாயியாட்டு
நேரப்பா சதுரவரை சங்குசிங்கு
நேரான ஹிரும்ஹயிம் அடவாய்ப்போடு
பேரப்பா பூரணத்தின் விசாலம்போல
பெருமையுள்ள யாகோபு கண்டோம்நாமே. (38)

கண்டோமே எண்கோணஞ்சிகாரவகாரம்
காசினியில் சிதம்பரத்தின் மூலம்போடு
விண்டோமே நகாரத்தின் பீஜமான
வேதாந்த சொரூபமப்பா வாலைதேவி
நின்றேமே யொருமனதாய் குருவைக்கண்டேன்
நிர்மலமாஞ் சோதியிலே ஒளியுங்கண்டேன்
தொண்டர் யாகோபுக்கு யாவுந்தோற்றும்
சொற்குருவின் கமலபதந் தோற்றும்பாரே. (39)

S.283

தோற்றுமப்பா மேல்வரையில் யவசிமகவென்று
சூட்டிடவே குருசூட்சம் பின்னுங்கேளு
சாற்றுமப்பா சவ்வும் உவ்வும் அவ்வுமென்று
சாடப்பா மாறிவைத்தேன் அறிவாய்ப் போடு
நாற்றிசை யிலுள்ள சித்தர் மெச்சிக் கொள்ள
நீறீயும் சிறீயுமென்று நன்றாய்ப்போடு
ஆற்றுமப்பா யெண்சாணின் வட்டத்தன்னில்
அகாரமுதல் உகாரவரை அடவாய்ப்போடே. (40)

போடப்பா உள்ளறையில் பத்துவீடு
புகழாகச் சிகாரமுதல் மகாரங் கொண்டு
நீடப்பா நின்றநிலை உகாரங்கொண்டு
கோண வட்டத்தில் யகாரம் போடு
போடப்பா கிறீயும் அறீயும் மென்றுசாடு
பெருமையாம் வட்டத்தின் உயிரைக்கேளு
வாடப்பா ஓம் ஆம் ஊம்மென்று
மகத்தான தண்டகத்தின் வட்டமாச்சே, (41)

ஆச்சப்பா வட்டவரை பனிரெண்டாகும்
அப்பனே சொல்லுகிறேன் பின்னுங்கேளு
பேச்சப்பா சொல்லவில்லை யெந்தன்வாக்கியம்
பேரான புஷ்பமலர்போ லேயாகும்
வாச்சப்பா வயகமசி சிதம்பரத்தின்மூலம்
மகத்தான நாற்பத்து மூக்கோணந்தான்
காச்சப்பா நாதவிந்து ரெண்டுங்கூடி
கருவாக சிராங்கிறீயுங் கண்டுபோடே: (42)

போடவே நாதவொலி ரேகைபோடு
பொருளான பேரண்ட ஸ்ரீங்காரம்போடு
நாடகவே கணக்காக ஐம்பத்தொன்றை
நலமான சிதம்பரத்தில் நாட்டுநாட்டு
பாடவே சிரகமென்ற நவக்கிரகம்
பாங்காக நாற்சவுக்கம் பீஜம்போடு
ஆடவே நவக்கிரக சூலம்போடு
ஆச்சுதப்பா நாற்பதுமூக் கோணந்தானே. (43)

தானென்ற கால்வாசல் கணபதியுன்கந்தன்
தன்மையுள்ள செயவீர வாகுதேவன்
ஞானென்ற அஷ்டகெஜம் அஷ்டதுர்க்கி
அஷ்டதிக்குப் பாலகரும் அஷ்டஞகம்
வானென்ற நவசித்தர் மூலம்போடு
மகத்தான நாதாக்கள் பீஜமாறுந்
தேனென்ற பென்குருதான் சொன்னமார்க்கம்
செயலாக யாக்கோபு செப்பினேமே. (44)

செப்பினேஞ் செயபேரி ஜெயமத்தாளம்
ஜெயதாரை ஜெயபம்பை ஜெயசங்நாதம்
அப்பினே மருள்பூரி நாதவோசை
அடவான கின்னரியும் பதினெண்வாத்யம்
தப்பினேம் நாற்பத்து மூக்கோணமப்பா
தாயான வாலைப்பெண் சவுந்தரதேவி
நப்பினேன் நாதாந்தம் பெற்றபெண்தான்
நாயகியாள் கொலுவிருக்கும் பீடமாச்சே. (45)

பீடமப்பா நாதரக்கள் மவுனபீடம்
பெலமான நபிமார்க எறிந்தபீடம்
ஆடப்பா நாற்பத்து மூக்கோணத்தை
அடவாகப் பூசிக்க வயணங்கேளு
நாடப்பா நாற்பத்து மூக்கோணத்தில்
நவிலுகிறேம் பாயசமும் வடைதேன்தேங்காய்
காடப்பா கனிவர்க்கம் இளநீர்வஸ்து
காயமுடன் நற்சிராம்பு அன்னமாமே. (46)

அன்னமுடன் அறுசுவையும் அண்டந்தானும்
அடைவான தாம்பூலம் அன்னசுத்தி
சின்னவய நிவேஷிட்டாள் சிவசத்நிபூசை
தெரிந்தவர்க்கே தான்தெரியும் தேவிபூசை
கன்னமுடன் முன்னமென்ற கற்பூரசோதி
கனிவுடனே சக்கரத்தைப் பூசிப்பாய்நீ
வன்னமுடன் கோங்குமல்லி பரிசாதம்
மகத்தான புஷ்பமலர் அர்ச்சிப்பாயே. (47)

அற்சித்துப் பூசிக்க அனேகஞ் சித்தி
ஆறுவரை அதிசயங்கள் பார்க்கலாகும்
பற்சிக்கச் சிதம்பாத்தில் நடன ஓசை
பார்த்தாக்கால் தெரியுமே வாலிபீடம்
நற்சிக்க நாயகியாள் வாலைப்பெண்ணை
நான்பணிந்தேன் நாற்பத்து மூக்கோணமேறி
தற்சொரூப மெந்தனுக்குப் பிரசன்னமானாள்
தாயானவாலையைத் தான் தெரிசித்தேனே. (48)

தெரிசித்தேன் தண்டகத்தின் தெளிவுஞ் சொன்னேன்
சிறப்பாக சிதம்பாத்தின் மகிமை சொன்னேன்
அரிதான ஆராதாரத்தைச் சொன்னேன்
அதுவொடுங்கி யெழுந்திருக்கும் மிடத்தைச்சொன்னேன்
தெரிசித்தேன் நிராதாரநிலையுஞ் சொன்னேன்
நேரான அட்சரத்தின் மாறல் சொன்னேன்
பெரிதாகப் பூசிக்க விபரஞ்சொன்னேன்
போன யாக்கோபு வசனங்கேளே. (49)

தண்டகக்குரு.

கேளப்பா ஆதியென்ற சாதிநாலு
கேசரியாம் பாசினிற மாசியேகேள்
ஆளப்பா வாசியென்ற வேசிஞசி
ஆகாச அண்டமப்பா ஆருங்காணார்
ஏளப்பா கருவுவெளி விந்துநாதம்
எல்லவரு மறிவார்கள் சாதிகாணார்
வேளப்பா யாக்கோபு அழுதவாக்கு
வேதாந்த தண்டகத்தில் விளங்குந்தானே. (50)

தானென்ற அண்டபகிரண்ட பிண்டம்
சமத்தான சாதியுட வர்னஞ்சொல்வோம்
வானென்ற சரிதையிலே வாழ்ந்தாரப்பா
மகத்தான அத்தினி சங்கினிதான்மைந்தா
தேனென்ற சித்தினியாள் போகக்காரி
சிலகால மனுபோகம் பிரியாள்பாரு
பானென்ற பத்மினியாள் காமரூபி
பரிசுடைய சக்கிரனி லுதித்தாள்பாரே. (51)

பாரப்பா சித்திரைநாள் பருவந்தன்னில்
பஞ்சமியா முத்தரத்தில் உதித்த பிண்டம்
ஆரப்பா அமாவாசை சுக்கிரவாரம்
அன்னாளி லுதித்தபிண்டம் அஞ்சுதிங்கள்
நேரப்பா சென்றவுடன் பிண்டமாச்சு
நேரான அண்டமென்ற வெள்ளைக்கல்தான்
சாரப்பா யாக்கோபு அமர்தவாக்கியம்
தாரணியி லாறிவார் தவத்தின்வாக்கே. (52)

வாக்கான கடைப்பிள்ளை பத்மனியாஞ்சாதி
வகைவிபரமாகவல்லோ சொல்லக்கேளு
போக்கான தொன்றுமில்லை ஐந்தாந்திங்கள்
பொருளான கருவப்பா ஆருஞ்சொல்லார்
தாக்கான தலைப்பிள்ளை அண்டமப்பா
சமத்தான பிண்டமதின் கல்லிவாங்கி
நாக்கான கல்லுரலி லண்டம்போட்டு
ஈவிலுகிறேன் இருப்புலக்கை யதனுற்குத்தே. (53)

குத்துகிறவகை யென்னமைந்தாகேளு
குறிப்பாக மாப்போலே குத்துவாய்நீ
பத்துகிற பாண்டமதில் மாக்கருவைப்போட்டு
பாங்காகச் சுத்தசலம தனில்வாரு
வத்துகிற மாக்கருவைக் கரைத்துக்கொண்டு
வளமாகக்கறைத் திருநீமறுகாளப்பா
மூத்துப்போல் பத்துமுறை யிறுத்துப்பின்பு
முன்புயாகோபு சொன்னேன் ரவியில்லையே. (54)

வையப்பா சொல்லிவிட்டோம் பாத்திரணே
வளமாக பத்துமுறை ரவியிற்காய்ந்தால்
பொய்யில்லை பழச்சாத்திற் பொடியைப்போடு
புகழாக அடுப்பேற்றிக் கலக்கிக்காய்ச்சி
அய்யமில்லை அண்டநீர் வத்தினக்கால்
அழகான கல்லுப்பின் கசிவுபோச்சு
வையகங்கள் முழுதுமிதி லடங்கிப்போச்சு
வாழ்வுசொன்ன யாக்கோபு மகிமைதானே. (55)

தானென யெண்ணெய்க்கு வெள்ளையாச்சு
சார்பான அண்டமெனுங் கல்லுப்பாச்சு
வேனென வெள்ளைக்கல் லுப்பிதப்பா
வேதாந்த மிம்முறையை வெளிவிடாதே
கானென கடையில்விற்குங் காரசாரம்
கருணையுள்ள பூரமொடு வீரந்தானும்
வேனென நாதவிந்து அஞ்சுங்கூட்டி
விபரமூடன் கல்வத்தி லாட்டிடாயே. (56)

ஆட்டியே கருநீலிச் சாறுவிட்டு
அப்பனே யிருசாம மாட்டுஆட்டு
பூட்டியே குலாமல்லிச் சாற்றுற்சாமம்
புகட்டுவாய் வெண்கரந்தைச் சாற்றில்சாமம்
தாட்டிகமா யிச்சரக்கு மெழுகுபோலாம்
தன்மையுட னிம்மெழுக்கைக் குகைபோற்பண்ணி
ஆட்டியொன்றும் பண்ணுதே வெள்ளைக்கல்லின்
ஆகாச உப்பதனை யறையக்கேளே. (57)

கேளப்பா உப்பெடுத்துக் குகைக்குள்வைத்துக்
கிருபையுடன் மண்சீலை யேழுஞ்செய்து
வாளப்பா யிக்குகையை ரவியில்வைக்க
மகத்தான பஞ்சகர்த்தா ளாடுவார்கள்
ஆளப்பா ஒருசாமம் ரவியிற்காய்ந்து
அப்பாலே கோழியென்ற புடத்திற்போடு
கோளப்பா வாராது யாகோப்சொன்ன
குருவான சுண்ணமதின் கருவைப்பாரே. (58)

பாரப்பா சுண்ணத்தில் நவாசந்தான்விட்டு
பாங்கான யெச்சமதர விழைத்துக்கொண்டு
தாரப்பா தாமிரத்தின் மீதுபூசித்
தன்மையுடன் மண்சீலை வலுவாய்ச்செய்து
சேரப்பா நற்காட்டாம ணக்குப்பட்டை
செயலான பட்டையிலே புடந்தான்போடு
நேரப்பா நீறியது குருவுமாகும்
நினைத்தசரக் கெல்லாந்தான் கொல்லுந்தானே. (59)

கொல்லுமப்பா அறுபத்து நாலுபேரைக்
குருவருளாற் கண்டவுடன் பதனம்பண்ணு
சொல்லுமப்பா ரசவாதி யாவதற்கு
சொற்குருவா மிந்நூலியின் முறைதானப்பா
அல்லலற்றுச் சுழுசார மாய்கையற்று
அநேகநாள் குருவிடத்தில் தொண்டுபண்ணி
வெல்லலற்று நிற்குணத்தின் மாய்கையற்று
வேதாந்த யாகோபு வேடம்பூணே. (60)

பூணவென்றுல் சற்குருவை யடித்தாற்சொல்வார்
பூலோக மவுனிகளும் ஞானிசொல்வார்
வேணவென்றுல் வேதாந்தி யவர்கள்சொல்வார்
விவேகமுள்ள காரணத்தின் குருவுஞ்சொல்வார்
ஏணவென்றுல் யிக்கருவைச் செய்துகொண்டு
எட்டுரெண்டும் பத்துவரை யேறியாடு
பாணவென்றுல் பத்தரையுந் தப்பாதப்பா
பார்தனில்யா கோபுசொன்ன பாகமாச்சே. (61)

ஆச்சப்பா தாமிரத்தின் குருவைச் சொன்னேன்
அடைவாக யின்னமொரு சேதிகேளு
பேச்சப்பா புவிதனிலிம் முறைதான்கொண்டு
பிரபல்ய மாகவல்லோ பேசுவார்கள்
காச்சப்பா கருக்குருவைச் சொல்லிவிட்டோம்
கயிலாச தண்டகத்தின் கருவிதாச்சு
பாச்சப்பா பத்மினியாம் பிண்டத்தாலே
பத்தரையு மாத்தாச்சு பரிவாய்த்தானே. (62

பரிவான தாமிரத்தைச் சுத்திசெய்து
பண்பாக உருக்கியே கசடுபோக்கி
அரிவான ஆனந்தக் குருவைப்போடு
ஆடுமடா கண்விட்டு அப்பாகேளு
குரியான பதம்பார்த்து யெடித்துச் சாய்த்தால்
கோடான கோடிவரை மாத்துக்காணும்
கெரியாக யிப்பொருளைச் செய்துகொண்டு
நேரான யாக்கோபு அமுதமுண்ணே. (63)

உண்ணப்பா யின்னமொரு சேதிகேளு
ஓகோகோ சொல்லுகிறேம் யெந்தன் நூலில்
வண்ணமென்ற பெருநூலி லனந்தம்போக்கு
வளமான சுண்ணத்தி லனந்தம்போக்கு
முன்னமென்ற முப்பூவி லனந்தம்போக்கு
மூதண்ட சிவசத்தி யாடுங்கூத்து
அன்னமென்று சொல்வேன்யான் தண்டகத்தின்
யாகோபு நடனலீலை நாதந்தானே. (64)

தானான பிண்டமதை யார்தான் சொல்வார்
தண்டகத்தில் யான்வெளியாய் சொல்லிவிட்டேன்
வேனான வேதாந்தப் பிண்டம்வாங்கி
விளக்கவே முன்போலே யிடித்துக்கொண்டு
வானான பிண்டமதை மாவதாக்கி
மகத்தான பாண்டத்திற் போட்டுமேன்தா
சூனான பத்துமுறை கரைத்துவாங்கிச்
சொல்லுகிறேம் முப்பூவின் சுருக்கமாமே. (65)

ஆமேதான் பனிவிழுந்த சலத்தைவாங்கி
அடைவான மாவதனைக் கரைத்துக்கொண்டு
பாமேதான் பத்துமுறை யிறுத்துவாங்கு
பாங்காக ரவியில்வைக்கப் பாறையுப்பாம்
தேமேதான் பத்துமுறை ரவியிற்காய்ந்தால்
தெளிவான பண்டத்தில் சரக்கைக்கேளு
ஆமேதான் அன்னலில் ராமதேவ
ராயிருந்து அஷ்டகர்மஞ் சொன்னேனுனே. (66)

நூல்விபரம்.

அஷ்டகர்ம மாடுதற்குப் பலதிரட்டு
ஐநூற்றி லன்பாகச் சொல்லிவிட்டேன்
இஷ்டமுடன் யிருநூற்றில் யோகஞ்சொன்னேன்
ஏகாந்த வினைதவகை நூற்றிற்சொன்னேன்
சட்டமுடன் எண்பதிலே வயித்தியஞ்சொன்னேன்
சமத்தான அஷ்டாங்க மைம்பதிலேசொன்னேன்
திட்டமதாய் முப்பத்திலே முப்புசொன்னேன்
நிறமாகப் பாஷைபதி னெட்டும்பாரே. (67)

பதினெண்பேர் பாஷையது பகரொண்ணாது
பாலகனே எண்ணூறில் விரித்துசொன்னேன்
மதியென்ற ஆயிரந்தான் பெருநூல்பீடம்
மகத்தான குருநூல்முன் னூறும்பாரு
விதியென்ற ஆயிரத்தின் சுருக்கமாச்சு
வேதாந்த சுருக்கமப்பா யிந்நூல்தானும்
அதிவிதங்காண் பெருநூலி லகிரிபாய்ந்தேன்
அதிலுலே முன்னூறு மறைத்துத்தானே. (68)

தானென்ற யோகத்தி லிருந்தேனப்பா
சார்பாக மறந்துவிட்டேன் நூல்தேடாமல்
கானென்ற கருவூரா யிரம்பேர்சித்தர்
கண்டார்கள் முன்னூற்றைக் கைக்கொண்டார்கள்
வானென்ற கருவறிந்து சித்தரோடே
மகத்தான போர்செய்து வாதாடித்தான்
தேனென்ற முன்னூறை வாங்கிக்கொண்டு
தெளிவான யோகிகட்குக் கொடுத்தேன்பாரே. (69)

கொடுத்திட்டு முன்சொன்ன குருவுதானும்
குறையாக யிருக்குதப்பா யின்னுங்கேளு
அடுத்திட்ட கடைச்சரக்கின் விபாங்கேளு
அப்பனே முன்சொன்ன உப்பிலப்பா
தொடுத்திட்ட வீரமொடு பூரந்தானும்
தூய்யமிகு ரசிதமென்ற வெள்ளைதானும்
அடுத்ததொரு லிங்கமொடு அஞ்சுமாச்சு
அருள்பெருகுங் கல்வமதில் தூளதாக்கே. (70)

தாக்கியே முன்சொன்ன மையிற்போட்டு
சமத்தான பழச்சாறு தன்மையாக
பாக்கியமாய்ப் பாண்டத்திற் போட்டுமைத்தா
பாலகனே மண்சீலை வேடுசெய்து
தூக்கிடுவாய் முழக்குழிதான் வெட்டியப்பா
சொரூபமாய்க் கவசம்வைத்து மேலேபாண்டம்
ஆக்கியே காட்டுமுட்டை யெடுத்துவைத்து
அப்பனே குளித்தயில மிறக்குவாயே. (71)

இறக்குயிர்த்தக் குளித்தயில மென்னசொல்வேன்
யிருக்குமப்பா சிவந்தவர்ணம் போலேதானும்
கறக்கியிந்தத் தயிலமதில் புனுகுபூரங்
கதம்பமென்ற கஸ்தூரி சவாதுமஞ்சள்
பறக்கியிந்த புஷ்பமலர் பாரிசாதம்
பலபுஷ்ப முல்லைமல்லி மருவுதானும்
எறக்கியிந்த வாசமெல்லாம் பொடித்துத்தூளாய்
ஏகாந்தத் தயிலமதில் வாசம்பூட்டே. (72)

பூட்டப்பா யிதுதானும் யோகஞானி
புகழ்பெற்ற மந்திரத்தை யருமையாக
வாட்டப்பா மண்டலந்தான் பத்துலெட்சம்
வகையாகச் சிதம்பரத்தின் உருவைச்சேவி
பாட்டப்பா சொல்லவில்லை உலகமாண்பர்
படிக்கவந்தக் கதைபோலே நினைக்கவேண்டாம்
ஆட்டப்பா ஆடுமிந்தத் தயிலந்தன்னில்
அஷ்டமா சித்துவிளை யாடலாமே. (73)

ஆடுமப்பா வசியத்தி லனேகஞ்சித்து
ஆடலா மோகனத்தி லனேகஞ்சித்து
ஊடுமுச் சாடணத்தி லனேகஞ்சித்து
ஓகோகோ தம்பனந்தான் கோடாகோடி
சாடுமாக் கிருஷ்ணத்தி லனேகங்கோடி
சண்டமா ருதவெள்ள மாய்கைதோற்றும்
பேடுவாய் பேதனத்தால் சகலசித்து
பேராம் வித்வேஷண மாரணந்தானுமே. (74)

ஆமப்பா அஷ்டசித்து மாடவென்றூல்
அந்தந்தத் தொழில்களுட முறைதப்பாமல்
சாமப்பா பெருநூலை வைத்துக்கொண்டு
சமத்தான தண்டகத்தின் முறையேசெய்வாய்
வாமப்பா பெருநூலில் காரம்கொண்டு
மகத்தான சிதம்பரத்தைப் பூசைபண்ணு
நாமப்பா காதாந்த காரங்கொண்டு
நாற்பத்து மூக்கோண வாலியாமே. (75)

வாலியாஞ் சிதம்பரத்தில் வந்துபிடம்
மகத்தான சமையமப்பா ஆறுதாரம்
பாலியாம் நாற்பத்து மூக்கோண பீடம்
பத்மினியாள் கொலுவிருந்த நாதபீடம்
சாலியா மவளுருவு தெரியவென்றுல்
சமத்தான தயிலமதில் கொஞ்சந் தொட்டு
காலியாங் கண்ணுடி பின்னேயூகிக்
கண்ணண்டை நேத்திரத்தி லொட்டிப்பாரே. (76)

பாரப்பா பார்த்தாக்கா லென்னசொல்வேன்
பரமண்டலங் கடந்துபரா பரமுந்தாண்டி
ஓரப்பா அகண்டவெளிக் கப்பாலேகி
ஆதியென்ற சோதிகடந் தப்பாலோடும்
காரப்பா கனகசபை ஆறுங்கண்டு
கயிலாச மேருமூடிக் கப்பாலேகி
தாரப்பா நிராதார மாதாரத்தைத்
தான்கண்டோம் யாகோபு வொளிகண்டோமே. (77)

கண்டோமே யித்தயிலஞ் சூட்சாசூட்சம்
கருவான அஞ்சனத்துக் காதிபீடம்
விண்டோமே பலதிரட்டி லாடும்வித்தை
விளங்கினே மித்தயிலங் கொண்டுசாடு
அண்டோமே பெருநூலா யிரத்திலாடும்
ஆதியிலே ராமனு யிருக்கும்போது
விண்டதொரு நூல்களிலே மறைத்ததெல்லாம்
வெளியாக்கிக் குருச்சுண்ண மாட்டினேமே. (78)

மாட்டினேம் நாம்சொன்ன நூல்களப்பா
மைந்தனே பதினென்றும் பார்த்துத்தேறு
காட்டினேம் கருக்குருவா மிந்தநூலில்
கதிரொளியைக் கண்டவர்க்கு விண்டோம்பாரு
ஆட்டினேர் தண்டகமாம் நூற்றிப்பத்தில்
அம்மம்மா சொச்சமுமீ அறிந்துதேறி
காட்டினேம் யாக்கோபு யிந்தநூலில்
நடனின்ற தேதறிவார் சிதறுவாரே. (79)

சதறுவா ரிந்நூலைப் பதனம்பண்ணு
செகமென்ற மாய்கையிலே சேராதேகேள்
அதறுவாய் ராமனுட நூல்களுக்கு
ஆதியென்ற குருவாகு மிந்தநூல்தான்
பதறுவாய் தண்டகமா மவுனபீடம்
பதிஞனன்று மிந்நூலி லடங்கிப்போச்சு
கதறுவா யிந்நூலை வெளிவிடாதே
காசினியில் யாக்கோபு சொன்னேன்பாரே. (80)

பாரேநீ யிதைவெளியிற் பேசிடாதே
பண்பாகச் சொல்லுகிறேன் செய்செந்தூரம்
தூரேநீ தருசுடனே தத்தஞ்சூதம்
துடியான வீரமொடு பூரம்நாபி
தாரேநீ தாரமுடன் லிங்கம்வங்கம்
தன்மையென்ற வெள்ளையப்பா காரசாரம்
சாரேநீ பனிரெண்டுஞ் சுத்திசெய்ய
தனதாயாக் கோபுசொன்னர் பதனம்பண்ணே. (81)

பதனமப்பா முன்சொன்ன மூப்புச்சுண்ணம்
பதிவான உப்பதிலே சொன்கைகொண்டு
விதனமப்பா பீங்கானில் வலுவாய்ப்போட்டு
வேதாந்தத் தயிலத்தில் கொஞ்சம்விட்டு
குதனமப்பா ரெண்டையுந்தான் கூட்டிமத்தி
குணமான பீங்கானில் ரவியில்வைத்தால்
அதனமா யாலகால விஷங்கள்போல
அதிலிறங்குஞ் செயரீரி னடைவுதாமே. (82)

ஆமப்பா யிச்செயரீர் தயிலங்கூட்டி
அறுபத்து நால்வரையும் அடிக்கலாகும்
வாமப்பா முன்சொன்ன சரக்கையெல்லாம்
வளமாகக் கல்வத்திற் போட்டுமைந்தா
சாமப்பா செயரீருந் தயிலம்விட்டு
சமத்தாக யிச்சரக்கை யாட்டிடாய்நீ
நேமப்பா மெழுகுபோல் திரளும்பாரு
நேராக மண்டலங்கொண் டரைத்திடாயே. (83)

அரைத்திடுவாய் நாளொன்றுக் கிருநேரமப்பா
அப்பனே ஒருசாம மடைவாய்த்தாக்கு
குரைத்திடுவாய் வெள்ளிபொன் செம்புஈயம்
குணமான வங்கமூட னேந்துபேரை
மரைத்திடுவாய் செயரீரி லூறப்போடு
மகத்தான தயிலத்தில் தோய்த்துத் தோய்த்து
கரைத்திடுவாய் கார்மேக மெழுகெடுத்துக்
கருணையுடன் தேங்காய்போல் குகைதான்செய்யோ. (84)

செய்யப்பா குகையைத்தா னேயாஐயா
சிரான குகைதனிலே ஐந்தும்போட்டு
அய்யப்பா அம்மெழுகால் வாயைமூடி
ஆனந்த சற்குருவைக் கொஞ்சம்போடு
மெய்யப்பா காட்டுமுட்டை கூடைகொண்டு
வேதாந்த சித்திரையிற் புடத்தைப்போடு
பொய்யப்பா சொல்லவில்லை யாகோப்சொன்னர்
புடம்போடி அதினுட்செங் தூரந்தானே. (85)

தாதென்ற செந்தூரம் யெடுத்துப்பார்த்தால்
தாரணியி லதிகமப்பா மாத்தோகோடி
வானென்ற யிந்திரமாங் கோபம்போலே
மகத்தான செந்தூரம் வர்ணங்காணும்
ஏனென்ற செந்தூர மிதினுலப்பா
யிகபரமுங் கொள்ளாது யிந்தவித்தை
காணென்ற யிரும்புசெம்பில் கசடகற்றிக்
கருணையுட னதையெடுத்து உருக்கிச்சாயே. (86)

சாயப்பா உருக்கையிலே பதந்தான்பார்த்து
தன்மையென்ற செந்தூரக் குருலைப்போடு
ஆயப்பா கண்விட்டு ஆடுமாடும்
அப்பனே நீயெடுத்துப் பாரு பாரு
நேயப்பா மாத்ததுதான் கோடா கோடி
நிலையான செந்தூர மகிமை மெத்த
தாயப்பா அமுதமள்ளி ஊட்டியிந்தத்
தருவான கருக்குருவைச் சாடென்றாளே. (87)

சாடென்றுல் நோயாளி தனக்குக் கேளு
சார்வாகப் பணவிடைதா னெடுத்து மைந்தா
பாடென்றுற் பசுவெண்ணெ கொண்டு வந்து
பாலகனே யனுப்பானத் தோடே யிங்ஙாள்
தேடென்ரு லிக்கருவால் சகலரோகம்
சீரான உடலிலிட்டு ஓடும்பாரு
நாடென்று யாக்கோப் செந் தூரங்கொண்டால்
நாடாது பேய்பூத கணங்கள் தானே. (88)

தானுன குன்மமொடு சூலதானும்
தனமையென்ற சுரங்காசங் குஷ்டரோகம்
தானுன மதுமேகங் காசரோகம்
மகத்தான பாண்டுவொடு மூலந்தானும்
வேனுன வெடிசூல கண்டமாலை
விப்புருதி முதற்கொண்டு விடுபட்டோடும்
ஆனுன அரையாப்பு கிரந்தி புண்கள்
அலறிடும் யாக்கோப்புச் செந்தூரம்பாரே. (89)

பாரப்பா செந்தூரம் பத்தியமாய்க் கொள்ளு
பத்தியத்தில் குறையிருந்தால் பழுதுகாணும்
நேரப்பா செந்தூரம் யார்தான்செய்வார்
நீடிலகில் சிவயோகி சித்தர் செய்வார்
மாரப்பா மவுனியென்ற ஞானிசெய்வார்
வையகத்தில் மதிமயங்கு மாடோசெய்யும்
ஆரப்பா அறிவார்யாக் கோப்செந்தூரம்
ஆதியென்ற சிதம்பரத்தைப் பூசிப்பாயே. (90)

பூசிப்பாய் செந்தூரஞ் சிவயோகத்தில்
புனிதமுட னிருக்கையிலே சமாதிகற்பம்
ஆசிப்பாய் தேகத்தில் சூடுகொண்டால்
அப்பவல்லோ செந்தூரங் கொண்டாலப்பா
பாசிப்பாய் பரசபையுன் கண்ணிற்காணும்
பராபரமாந் தரிசனத்தைப் பார்க்கலாகும்
தாசிப்பாய் சட்டைதள்ளி மண்டலத்தில்
சமரசத்தின் வெளிதாண்டி யேறலாமே. (91)

ஏறலாந் தத்துவமாந் தொண்ணூற்றுறும்
இகபரமுங் கண்டுமைந்தா யேறினேம்ஞரம்
சேறலா மதிதவித்தை செயசெந்தூரம்
திறமாகச் சொல்லிவிட்டோஞ் சேதிகேளு
பாரெலாந் திரிந்தலைந்து போகவேண்டாரம்
பண்புடைய பெரியோரைத் தொண்டுபண்ணு
சாரலாஞ் சற்குருவாக் கோபுசொன்ன
சற்குருவை அடித்தாக்கால் வெளியாய்ப்போச்சே. (92)

போச்சென்று நினையாதே யின்னுங்கேளு
புகழாக யின்னமொரு சேதிதானும்
வாச்சுவிட்டா லுந்தனக்கு ரசசெந்தூரம்
மைந்தனே சொல்லுகிறேன் மகத்தாம்வித்தை
பாச்சென்று நினையாதே கெவுரிகாந்தம்
பரிவான மஞ்ஞசிலையும் பனைப்பாஷாணம்
காச்சென்ற காரமுடன் சாரம்வீரம்
கருணையுள்ள செயரசந்தான் லிங்கங்கூட்டே. (93)

கூட்டுவாய் சீனமுடன் வண்டுநாபி
கூறினேன் பனிரெண்டுஞ் சுத்திசெய்து
வாட்டுவாய் மூன்சொன்ன செயநீர்தன்னில்
மைந்தனே ஒருசாமம் ஊறப்போட்டு
ஆட்டுவாய் அஷ்டமாத் தயிலங்கொண்டு
அப்பனே கல்வத்தி லாட்டிடாய்நீ
பாட்டென்று நினையாதே யாக்கோப்சொன்னார்
பலியாது யென்றவர்கள் பாழ்போவாரே. (94)

போவாரே கல்வத்தி லாட்டியேதான்
புகழாகத் தான்வழித்தால் மெழுகுபோலாம்
ஆவாரே யிம்மெழுகைக் குகைபோற்பண்ணி
ஆனதொரு தேங்காய்போற் றிரளும்போது
மாவாரே வாலரசஞ் சுத்திசெய்து
மகத்தான யிக்குகையில் வைத்துமைந்தா
பாவாரே முன்குருவாஞ் செயசெந்தூரம்
பாங்கான முப்புசுண்ணம் வழுகன்போடே (95)

போடப்பா அம்மெழுகால் குதைவாய்மூடி
புகழாகக் காட்டுமூட்டை புடந்தான்போடு
ஆடப்பா கெஜபுடந்தான் போட்டாயானால்
அக்குகையில் செந்தூரம் பூக்கும்பாரு
வாடப்பா வாலரச செந்தூரத்தை
வகையாகப் பதம்பார்த்து யெடித்துக்கொண்டு
வடப்பா குருவாகு மிந்தவித்தை
ஏமமென்ற பரியேம மிதுக்கொவ்வாதே. (96)

ஒவ்வாத செந்தூரம் பணவிடைதான் கொண்டால்
ஓகோகோ கோடியுகங் காயம்நிற்கும்
சவ்வாது வாசம்போல் மண்டலத்தில்
சடத்திலுள்ள பிணிகளெல்லாஞ் சாராதோடும்
மவ்வாது வாலாரசச் செந்தூரத்தை
மகத்தான நாதாக்கள் பூசிப்பார்கள்
தவ்வாத செந்தூரம் பதனம்பண்ணு
சாயுச்ய பதவியிலே யிருந்துதேறே. (97

தேறப்பா தண்டகத்தி லிடுங்கூத்து
தெளிவாக நாம்கண்டு உமக்குச்சொன்னேன்
ஆரப்பா சொல்வார்கள் வாலிபீடம்
அறிந்தமட்டுஞ் சொன்னேனப்பா சொச்சங்கேளு
தேரப்பா வாமப்பெண் வாலிதேவி
தெளிந்தேனே நாற்பத்து மூக்கோணபூசை
சாரப்பா சிதம்பரமு மவுனஸ்தம்பம்
தாயான பராபரியைப் பணிந்தோம்நாமே. (98)

ஆமப்பா நபிமார்கள் கிருபையாலே
ஆதிபரா பரத்துநீலை அறிவாற்கண்டோம்
நாமப்பா சொல்லிவிட்டோம் தண்டகத்தில்
நமனில்லை கோடிவரை நன்றுய்ச்சொன்னேம்
சாமப்பா சாவதுவும் பிரிலிபோச்சு
சச்சுதா னந்தவெளி சார்புகண்டோம்
வாமப்பா அண்டாண்ட மருளுக்கண்டோம்
மகத்தான யாகோபு பொருள்விண்டோமே. (99)

பொருளான பூரணியாம் வாலைதேவி
பூமாதைக் கண்டமப்பா தெண்டஞ்செய்தோம்
அருளான ஆதியடா சோதிசோதி
அம்பிகையாள் கொலுவிருக்கும் பீடங்கண்டோம்
தருளான தாயாரைக் கண்டோமப்பா
தற்பரத்தி னொளிகாட்டிச் சாதித்தாள்பார்
பருளான பதினாறு வயதுப்பெண்தான்
பாலித்தா ளஷ்டசித்துஞ் சாதித்தாளே. (100)

சாதித்தாள் ஞானத்தின் மகிமை சொன்னாள்
சமத்தான சஞ்சார சமாதி சொன்னாள்
போதித்தாள் பூரணத்தின் குரியுஞ் சொன்னாள்
புகழான அஷ்ட சித்தி கருவுஞ்சொன்னாள்
சேதித்தாள் செயமான செந்தூரஞ் சொன்னாள்
செகமயக்கும் அஞ்சணமும் யோகஞ்சொன்னாள்
வாதித்தாள் வாலாசச் செந்தூர கற்பம்
மகத்தான யாக்கோபு மகிமைதானே. (101)

மகிமையென்ற நாற்பத்து மூக்கோணஞ் சொன்னாள்
மகத்தான சிதம்பரமும் யோகதீட்சை
அகிமையென்ற ஐம்பத்தோ ராட்சரத்தில்
ஆதார நிராதார நிலையுஞ் சொன்னாள்
பகிமையென்ற பராபரையாள் சொன்னபாகம்
பாடினேந் தண்டகத்தின் பண்போகேளீர்
தகிமையென்ற தாரணியில் யாக்கோ பென்பேர்
தற்பரத்தி னொளிகண்டோந் தாய்சொன்னாளே. (102)

தாயேபெண் மாமயிலே தற்பரத்தின்
தயாபரத்தின் தன்னொளியே வாவாதேவி
ஆயேயென் னம்பிகையே அமுதவாழ்வே
அண்டபிண் டத்தொளிவே அம்மா அம்மா
நீயேகா னென்றவர்க்கு கொஞ்சும் மாதே
நிராதார தற்பொருளே அருளே யென்றும்
வாயோன் பொற்கொடியே ஞானரூபி
மகத்தான பூமாதே யென்று காணே. (103)

காணவே தண்டகத்தி லாடுந்தேவி
கற்பூர தீபவொளி கௌரி மாரி
நாணவே சதுரகிரி யுறைந்தாளர்த்தாள்
நவராத்திரிக் கொலுவதனி லிருக்கும்தேவி
தேனே நீதெவிட்டாத அமுத வாழ்வே
திரிபுரமாஞ் சோதிமணி விளக்கே யென்று
நானேநீ நாதாந்த சொரூப வாழ்வே
நாயகியே வாலைப்பெண் தாயே யென்னே. (104)

என்னவே பதினெண்பேர் போற்றிச்செய்யும்
ஏந்திழையே பரிசுடைய காமரூபி
வன்னவே வாலைசுந் தரமேதேவி
மகத்தான சித்தருக்கு வரங்களீயும்
அன்னமே ஆகிசத்தி அம்பிகாநீ
அம்மம்மா தண்டகத்தில் கொலுவிருக்கும்
சொன்னமே புவிவாழும் லோகமாதா
சொற்பெரிய பராபரையைத் தெரிசித்தோமே. (105)

தெரிசித்தோம் தண்டகமாம் நூற்றுப்பத்தில்
திறமாகப் பாடிவிட்டோம் தெளிவுள்ளோர்கள்
அரிசித்தோ மிந்நூல்தான் சூட்சாசூட்சம்
ஆருக்கும் அரஞாண கொடுக்கவேண்டாம்
பரிசித்தோம் பனிரெண்டு வருஷமப்பா
பரமகுரு தண்டகத்தில் பாடுபட்டோம்
வருசித்தோம் சற்குருவை அடித்துக்காத்தோம்
மகத்தான யாக்கோபு அருளீதாமே. (106)

அருளுவா ராதியென்ற அண்டபிண்டம்
அகண்டவெளி சராசரத்தி னருளேவாழி
பருளுவார் பராபரத்தின் பொருளேவாழி
பதியான சிதம்பரத்தின் பாதம்வாழி
நருளுவார் நாற்பத்து மூக்கோணம்வாழி
நாதாந்த நாயகியே வாழிவாழி
சரிதையென்ற பத்மினியாம் நாலாஞ்சாதி
சதுர்வேத யாக்கோபு சொன்னவாழி. (107)

வேதமென்ற நபிமார்க்கு வாழிவாழி
விவேகமுள்ள நாதாக்கள் பாதம்வாழி
போதமென்ற பொதிகைவளர் தெட்சணையன்
புனிதமுள்ள அகத்தீசர் பாதம்வாழி
நீதமென்ற நபிமார்கள் குருவர்மெங்கள்
நேர்மைபெற்ற சற்குருவின் பாதம்வாழி
வாதெனவே வந்தவர்க்கு யாக்கோப்சொன்ன
மகத்தான தண்டகத்தின் மகிமைதானே. (108)

தானென்ற தண்டகம்யாக் கோபுசொன்ன
தற்சொரூப நாதவிந்து பீடமப்பா
வேனென்ற சாவேது நாதபீடம்
வேதாந்த தண்டகமா முழுதும்பார்த்து
நானென்ற நாதாக்கள் சத்தகோடி
நாலுதிசை சித்தர்களும் நடனஞ்செய்து
பானென்ற வாத்தியமாம் பதினெண்வாத்தியம்
பரிபாஷை டமபேரி பரிசித்தாரே. (109)

பரிசித்தார் புஷ்பமலர் மாரிபோலே
பகல்போலே தண்டகத்தில் சோதிகண்டார்
வரிசித்தார் அமுதநதி கங்கைதீர்த்தம்
மகத்தான அமுதமதை ஆதியென்றார்
தரிசித்தார் தண்டகமாய் தூறுஞ்சொச்சம்
சார்பாகச் சித்தருக்காய் வெளியாய்ச்சொன்னார்
தெரிசித்தார் நாதாக்கள் தெளிந்துதேறி
தெண்டகமாம் யாக்கோபு சித்துமுற்றே. (110)

தண்டகம் — ஈரைஞ்.

முற்றிற்று.




உ

கடவுள் துணை.

யாகோபு திருவாய்மலர்ந்தருளிய

வயித்தியசூஸ்திரம்-நூறு



காப்பு.

பூரணமா யிறைந்த பரத்தைத்தானும்
புகழாக யானுமே போற்றிசெய்து
காரணமாய் நபிமார்கள் பாதம்போற்றித்
தற்சொரூப மாய்விளங்கும் வெளியைப்போற்றி
காரணமாய் வயித்தியமு ன்னூறுஞ்சொல்லி
கருத்தாக ஐம்பத்தைந் ததனைச்சொல்ல
ஆரணமா யெந்தனுக்கு உபதேசித்த
அன்பார்ந்த ரஹ்மானின் பாதங்காப்பே.

சயகாசத்துக்குச் செந்தூரம்.

காப்பான லிங்கமூட னரிதாரந்தான்
கணக்காக வீரமூடன் பூரந்தானும்
தாப்பான மனோசிலையும் ஊசிக்காந்தம்
சரியாக வகைக்குக்காற் பலமேவாங்கி
மாப்பாக யிவையாவுஞ் சுத்திசெய்து
மட்டமதாய் புதுச்சட்டி தன்னிற்போட்டு
கோப்பாக மூசுமூசுக்கைச் சாறுவிட்டுக்
குறிப்பாக ரவிதனிலே காயவைத்தே. (1)

காயவைத்துப் பின்பெடுத்துக் கொண்டுதானும்
கணக்காகக் கல்வத்தி லிட்டுநன்றாய்
நேய்முடன் பழச்சாறு தன்னுலாட்டி
நிச்சயமா யிரவிதனிற் காயவைத்து
தேயமுள்ள மெழுகுபத மானபின்பு
சிறப்பான வட்டோடு தன்னில்வைத்து
ஆயமாய் மேலோடு கவிழ்த்துமூட
அருமையா யாக்கோபு சொன்னவாறே. (2)

சொன்னதொரு ஒட்டுக்குக் கவசந்தானும்
சுண்ணும்புச் சேலைசுற்றிக் கவசஞ்செய்து
நன்னயமா யைந்தெருவிற் புடத்தைப்போட்டு
நாடியே ஆறினபின் னெடுத்துப்பாரு
மின்னல்போல் செந்தூர மிருக்கும்நல்ல
மேலான சிமிழ்தனிலே வைத்துக்கொண்டு
கன்னல்போற் பணவிடைதா னிஞ்சிச்சாற்றில்
கருத்தாகப் புசித்துவர வியாதிபோமே. (3)

போமென்ற வியாதிகளோச் சொல்லக்கேளு
புகழான சயமீளை யிளைப்புக்காசம்
நாமென்ற மகோதரங்கள் வெப்புப்பார்வை
நாடிவந்த மேகமுடன் பரங்கிக்குஷ்டம்
ஆமென்ற சில்விஷத்தால் வெடித்தசூலை
அன்பாக நாளாறிற் பறந்துபோகும்
ஓமென்று உலகத்தோர்க் கிந்நூல்தானும்
உறுதியா யாக்கோபு சொன்னேன்பாரே. (4)

பாரேநீ பத்தியமோ யிச்சாபத்தியம்
பரிவான கரப்பானின் பண்டந்தள்ள
நேரேதா னெந்தனுக்கு நபிமார்சொன்னார்
நீணிலத்தோர் பிழைப்பதற்கு வெளியாய்ச் சொன்னேன்
சீரேதான் பசித்துவந்தோர்க் கன்னதானஞ்
சிறப்பாகச் செய்துவர வந்தரோகம்
தேரேதான் தூளாகப் பறந்துபோகும்
தீரமுடன் யாக்கோபு செய்மீதாமே. (5)

நீரிழிவுக்குத் தாளகச்சேந்தூரம்.

செயமான தாளகச்செந் தூரங்கேளு
திறமான தாளகமும் பலந்தானொன்று
நயமான காரமது பலந்தானொன்று
நல்லதொரு வெடியுப்புத் தூருசூதத்தம்
வயமான வீரமுடன் சாம்பிராணி
வகைக்குமுன்வீ தம்பலந்தா னொன்றுவாங்கி
பயமாக முன்போலே புடந்தான்போடப்
பகரரிய செந்தூர மாகும்பாரே. (6)

ஆகுமொரு செந்தூரஞ் சிமிலில்வைத்து
அன்பாகப் பணவிடைதான் தேனிற்கொள்ள
போகுகின்ற வியாதிகளைச் சொல்லக்கேளு
புகழான நடுக்குவலி கிராணிமூலம்
ஏகுமே நீரிழிவு பிரமே கந்தான்
எரிகுண்மங் காமாலை குஷ்ட ரோகம்
வாகுபெறுங் கருஞ்சோகை மஞ்சள் சோகை
மந்தார காசமூதற் றீருந் தானே. (7)

திருமே ஈளாதில் வியாதி போகும்
திறமான பத்தியத்தைச் சொல்லக் கேளு
நேருகின்ற புளியுப்பை மூன்று வேளை
நிட்சயமாய்த் தள்ளியே யுண்டு பின்னும்
தேருமே யிச்சாபத் தியங்க ளாக
சிறப்பாக கரப்பானுந் தள்ள வேண்டும்
பாருமே கடுகுநல் லெண்ணெய் தள்ளிப்
பத்தியமா யிருந்திடயாக் கோப் சொன்னரே. (8)

மூலமூலாக்குக் குழம்பு.

ஆரேதான் குழம்பொன்று சொல்லக் கேளு
அருமையாந் திருசுடனே கற்பூ ரந்தான்
தேரேதான் கஷ்தூரி மஞ்சள் ஓமம்
திறமான பெருங்காயம் கடுகிந் துப்பு
சீரேதான் வகைக்குக்காற் பலமே வாங்கி
செயலான ஏரண்டத் தெண்ணெய்விட்டு
பாரேதான் அரைத்திடவே குழம்பு மாகும்
பதனமாய் வழித்துநீ சிமிலிற்போடே. (9)

போட்டபின்பு அனுப்பானஞ் சொல்லக்கேளு
புகழான கருந்தவிடு தன்னி லேதான்
நாட்டமுடன் குண்டுமணி யளவ தாக
நன்றுகத் தானுருட்டி வைத்துக் கொண்டு
தேட்டமுட னுண்டுவரக் கிருமி வீழும்
திறமான புளைச்சலது பாசி பத்தும்
வாட்டமுட னேடிவிடு மஷ்ட குன்மம்
மலங்கழியும் மூலமூளை யோடுந் தானே. (10)

தானென்ற குழம்பாலே தேகஞ் சுத்தி
தானுகும் வியாதியுட வேகம்போகும்
காணென்ற வெப்பமது மூன்னே போகும்
கலமான அன்னமது பாலி லேதான்
தேனென்ற கரியுப்பை பூறப் போட்டு
திகழாக ஏழுநாள்க் கொண்டா யானுல்
வானென்று சொன்னதொரு வியாதி யெல்லாம்
வாய்பேசா தோடுமின்னங் களிம்பு கேளே. (11)

கண்டமாலைக்குக் களிம்பு.

இன்னவே திருநீல மயானப் பூடு
இனிமையாய் மெத்தவுண்டு பெண்பூ டப்பா
நன்னவே கொண்டுவந்து கல்வத் திட்டு
நல்லதொரு கற்பூரம் அரிதா ரந்தான்
பன்னவே வகைக்கிரண்டு களஞ்சு வாங்கு
பண்பாகக் கல்வத்தி லிட்டு நீயும்
சொன்னபடி ஏரண்டத் தெண்ணெய் வார்த்துச்
சுகமாக அறைத்திடவே களிம்புமாச்சே. (12)

ஆச்சென்ற களிம்பதனை வழித்து நீயும்
அடைவாக யிலவம்பஞ்சு தன்னி லூட்டி
வீச்சென்ற நாள்மூன்று போட்டா யானுல்
விபரமடா பொன்னியொடு கண்ட மாலை
மூச்சென்ற பரங்கியதும் அல்குற்குத்து
மூதலான தடிச்சிலந்தி துடைவா ளைப்புண்
ஏச்சென்ற பருமுதலாய் வந்த புண்கள்
இல்லாமற் சருகுபோற் காயும் பாரே. (13)

கபாலவாய்வுக்குச் சூரணம்.

பாரேநீ சூரணந்தான் ஒன்று கேளு
பதமான சாம்பிராணி கடுக்காய் கோஷ்டம்
காரேதான் வெந்தயமுந் திரிகடுகும்
காயமுடன் வகைக்குக்கால் பலந்தான் வாங்கி
ஆரேதான் புதுச்சட்டிக் குள்ளே போட்டு
அதுமுங்கப் பழச்சாறு விட்டு நன்றாய்
நேரேதான் கிண்டிவிட்டு ரவியில்வைக்க
நிச்சயமா யாகோபு சொன்ன வாறே. (14)

சொன்னபடி காய்ந்தபின்பு யெடுத்துக் கொண்டு
சுகமாக உரலிலிட்டு யிடித்து நன்றாய்
நன்னயமாய் வடிகட்டி கலசத் திட்டு
நலமான வெள்ளாச்சர்க் கரையுஞ் சேர்த்து
தன்மையாய்த் தான்பிசைந்து நெல்லிக் காய்போல்
தானுருட்டிச் சாடியிலே வைத்துக் கொண்டு
கன்னல்போல் மண்டலந்தான் கொண்டா யானால்
கருத்தாகத் தீருகின்ற வியர்தி பாரே. (15)

பாரேதான் காலுளாச்சல் மூடக்கல் வாதம்
பளிச்சென்ற யெரிகுன்மம் கபால வாய்வு
நேரேதான் விழியதிலே படரும் நீரும்
நிட்சயமாய் உஷ்ணத்தா லெடுத்த காந்தல்
காரேதான் பச்சையிள வாதஞ் சூடு
காதிறைச்சல் குத்துமுதற் கபால வாய்வு
சீரேதான் அனற்சூடு தாக ரோகந்
தீர்ந்துவிடும் யாகோபு சொன்ன வாறே. (16)

உஷ்ண வாய்வுக்குச் சூரணம்.

தீர்ந்துவிடு மின்னமொரு சூரணங்கேள்
செருப்படையின் கொடுவேலி மூலத் தோடு
ஆர்ந்ததொரு லிங்கமுடன் காந்தந் தானும்
அடைவாகச் சவ்வீரம் வகைக்குக் கால்தான்
நேர்ந்ததொரு புதுச்சட்டிக் குள்ளே போட்டு
நேர்மையுள்ள கொடுப்பைச்சார் முங்க விட்டு
சார்ந்ததொரு கடுவெயிலிற் காய வைத்து
தானெடுத்து இடித்துநன்றாய்ச் சூர ணித்தே. (17)

சூரணித்துத் தேனதிலே நெல்லிக் காய்போல்
சுகமாகத் தானுருட்டி யீரூர் வேளை
சாரமுட னிருவேளை யுண்டா யானால்
தான்தீரும் வியாதிதனைச் சாற்றக் கேளு
பாரமுள்ள உஷ்ணத்தால் வந்த வாய்வு
பத்தியே பித்தத்தால் வந்த வாய்வு
தீரமாய் முதுகதிலே யேறும் வாய்வு
செயலான சுரங்கள் முதல் நீருந் தானே. (18)

தானென்ற வாய்வுமுத லான தெல்லாம்
தானேடும் சடத்துக்கு உறுதி மெத்த
வேனென்ற தேகமது பெலத்துப் போகும்
வேணுமென்ற ஆகார மெத்த வாங்கும்
நானென்ற பெண்ணுசை தள்ள வேண்டும்
நலமான நல்லெணணெய் கடுகு மாகா
கோனென்ற யாகோபு சொன்ன நீதி
குவலயத்தோர்க் காகவே கூறி னேனே. (19)

கர்ப்பச் சூரணம்.

கூறினே னின்னமொரு குரணந்தான்
குருவாகும் வில்வமர விலையே மூலம்
தேறியே கொண்டுவந்து உலர்ந்த பின்பு
சீரகமும் வெந்தையமும் கிராம்பு யேலம்
மீறியே மதுரம்வகைப் பலமே காலாம்
விளங்கவே உரலிலிட்டுச் சூர ணித்து
கோரியதோர் தேனதிலே நெல்லிக் காய்போல்
குறிப்பாகத் தானுருட்டி உண்டாற் கேளே. (20)

உண்டாக்கால் கர்ப்பத்துக் குறுதி யாகும்
உண்மையுடன் மண்டலந்தான் புசித்து வந்தால்
பண்டான கர்ப்பப்பூச் சிகளும் போகும்
பாரமுள்ள கர்ப்பவாய் வுகளும் போகும்
துண்டான யிருபத்தொரு மேகம் போகும்
சூலைமுதல் வியாதிகளுந் தூலந்தே போகும்
கண்டாக்கா லிம்மருந்தை வெளிவி டார்கள்
கருவான கர்ப்பமுண்டாங் கண்டு பாரே. (21)

மருந்தீடு முறியச் சூரணம்.

கற்பமுண்டாம் பின்னுமிந்தச் சூர ணத்தைக்
காசினியில் மருந்தீடு கொண்ட போர்க்கு
அற்பமென்று நினையாமற் சூர ணத்தை
அன்புடனே ஒருவாரம் உண்பா ராகில்
உற்பனமாய் வயிற்றிருந்த மருந்தீ டெல்லாம்
ஓகோ கோமலமாகச் செமித்து வீழும்
தற்பரனுர் செயலாலே உலகத் தோர்கள்
தான்பிழைக்க வெளிபிட்டுச் சொன்னேன் பாரே. (22)

சன்னிக்குக் குழம்பு.

பாரேநீ குழம்பொன்று சொல்லக் கேளு
பரிவான காந்தமுடன் லிங்கந் தானும்
நேரேநீ தருசுடனே கார சாரம்
நேர்மையுடன் வகைக்கிரண்டு களஞ்சு வாங்கி
தேரேநீ கல்வத்தி லிட்டு நீயும்
திறமான பழச்சாறு விட்டு ஆட்டி
பேரேநீ குழம்பதனை வழித் தெடுத்து
பெருமையுள்ள சிமிளதனில் வழித்துவைத்தே. (23)

வைத்துவிட்டு யிஞ்சியுட சாரு தன்னில்
வழியோடே சுண்டக்கா யளவு போட்டு
மெத்தவே தான்குழப்பிக் கரைத்துக் கொண்டு
வெகுவாக உள்ளுக்குக் கொடுத்தா யானால்
மத்ததொரு பதின்மூன்று சன்னி யுந்தான்
மயக்கமொடு அசதிகளும் விலகிப் போகும்
சித்தமொடு யாகோபு சொன்னேன் பாரு
சிறப்பாக நில்லென்று செய்து பாரே. (24)

நில்லென்று ஐயத்தாற் புலப்பங் கண்டால்
நேர்மையென்ற சன்னியினுல் வெறியுண் டாகும்
வல்லதொரு மயக்கம்வரும் விலகு தற்கு
வகைகேளு அமுதப்பால் கொஞ்சம் வாங்கி
நல்லதொரு மெழுகதனிற் கடுகெ டுத்து
நலமாகத் தான்குழப்பிக் கண்ணிற் போட
மெல்லவே சன்னியுந்தான் விலகி யோடும்
விளம்பினேன் யாக்கோபு நீதி தானே. (25)

கர்ப்பச்சூரணம்.

நீதியுள்ள சூரணந்தான் வெகுபோக் காகும்
நிகழ்த்துகிறேன் நவச்சாரஞ் சீனக் காரம்
ஆதியென்ற காந்தமுடன் கூகை நீரும்
அரிதான கடுக்காயுங் காயம் மஞ்சள்
சோதியென்ற கற்பூரம் வால்மி ளகும்
சுகமான கிறும்புடனே சாதிப் பத்திரி
கோதில்லா திவையாவுங் காற்பலமே வாங்கி
குறிப்பாகப் புதுச்சட்டி தன்னிற் போடே. (26)

போடுவது வேலியுட பருத்திச் சாறு
புகழாகச் சட்டியிலே மூங்க விட்டு
கூடியே சார்வற்ற வெயிலில் வைத்து
குறிப்பாகக் காய்ந்தபுன்பு உரலி லிட்டு
தேடியே யிடித்துநன்றாய்ச் சூர ணித்துச்
சிறப்பான புதுக்கலசந் தன்னிற் சேர்த்து
நாடியே வேப்பமரப் பட்டை தன்னை
நலமாகப் பலம்பத்துக் கியாழம் போடே. (27)

போட்டதொரு கியாழத்திற் படியரைக்கால்
புகழான சூரணமே கடிகைப் போட்டு
காட்டமுள்ள பெண்ணவள்தான் விலக்கு நாளில்
நன்மைபெற இரண்டுநாள் தான்கொடுத்தால்
தேட்டமுள்ள சூதகந்தான் ரெம்ப வாகும்
திறமான கர்ப்பத்தின் கிருமி போகும்
வாட்டமிலா கர்ப்பங்கள் மிகத் தரிக்கும்
மகத்தான யாகோபு வகைதான் பாரே. (28)

வகையென்ன ஐந்தாநாள் குளித்து மூழ்கி
மகிழ்வாகக் கணவனுடன் சேர்ந்தி ருந்தால்
தகையிலாக் கருக்குழியிற் கர்ப்ப மாகித்
தானதுவே மாதமதாய்த் தானி ருந்து
திகையிலா தேபத்து மாதம் சென்று
சிறப்பான குழந்தையது பிறக்கும் யாரு
நகையிலா யாகோபு உலகத் தோர்க்கு
நாட்டிவைத்தேன் வழிகண்டு பிழைக்கத் தானே (29)

மருந்து முறிவுக்குக் கியாளம்.

பிழைப்பதற்கு கியாளமென்று சொல்லு கின்றேன்
பெரியதொரு பற்பஞ்செந் தூரந் தன்னை
தழைப்பதற்கு வியாதியறப் பிரிய மாகச்
சாப்பிட்டு வியாதியது தீரு முன்னே
கழைப்புடனே வேறுமொரு மருந்து கின்றல்
காசினியி லவர்களுக்கு வெப்பு தாக்கி
இழைப்புடனே திரிவார்க ளவர்க ளுக்கு
இனிமையுட ன்நற்கியா ளத்தைக் கேளே. (30)

கேளேநீ வெள்ளருகு சமூலந் தானுங்
கிருபையுள்ள மாதளத்துப் பழத்தின் தோடும்
நாளேதான் மிளகுடனே கூகை நீரும்
நலமாக வகைக்கிரண்டு களஞ் சிவாங்கி
வேளேதான் புதுச்சட்டி தன்னிற் போட்டு
மிகவேதான் படியொன்று தண்ணீர் விட்டு
கோளேதான் வாராம லடுப்பி லேற்றி
குறுகியே யெட்டொன்றாய் வருகும் போதே. (31)

வருகின்ற சமையம்பார்த் திறக்கிக் கொண்டு
வன்மையாம் பிங்காணிற் றூளி ருத்து
தருகின்ற சர்க்கரையும் கொஞ்சம்போட்டு
தப்பாம லதைக்கலக்கிக் கொண்டா ராலே
பெருகின்ற மருந்தீடு வேக மெல்லாம்
பெசாம லோடிவிடும் பிழைக்கச் சொன்னேன்
உருகின்ற மனிதனுமே பெலவா னவான்
உற்றுணர்ந்து யாகோபு உரைத்தார் தானே. (32)

ஈகாசத்திற்குத் தைலம்.

உரைத்ததொரு தயிலத்தின் விபரங் கேளு
உண்மையாம் வில்வமர மூல மொன்று
நிரைத்ததொரு முல்லையுட மூல மொன்று
நேரான மஞ்சணத்தி மூல மொன்று
திரைத்ததொரு கொடிவேலி மூல மொன்று
திகழ்கண்டங் கத்திரியின் மூல மொன்று
விரைத்ததொரு வேர்மூலங் கொண்டு வந்து
விகசிதமாய்க் காய்ந்தபின்பு கண்ட மாக்கே. (33)

கண்டமதாய்த் தானுக்கிச் சரி சமனுய்க்
காசினியோர் பிழைப்பதற்குக் பாணி யிட்டுக்
கொண்டதொரு வேருமுங்க ளீரைவிட்டு
குறிப்பாக அடுப்பேற்றி யெரித் திருத்து
குண்டமதி லிரண்டுபடி யெடுத்துக் கொண்டு
கூராக மூத்தெண்ணெய் படிதான் விட்டு
பண்டமதாம் வெள்ளெண்ணெய் படிதான் விட்டு
பாங்காக நாலுபடி சேர்த்துக் காச்சே. (34)

காச்சலிலே மிளகுமஞ்சள் சாம்பி ராணி
கலங்கமில்லாப் பூரமுடன் கோஷ்டங் தானும்
ஏச்சலிலா காற்பலம தாக வாங்கி
இயல்பாகவே பொடித்துப் பாண்டத் திட்டு
மாச்சலிலா தேகாச்சி வருகும்போது
வகையான மெழுகுபதம் வருதல்கண்டு
ஆச்சலிலாதே யிறக்கி வைத்துக்கொண்டு
அடைவாகக் குப்பியிலே யிருத்துக் கொள்ளே. (35)

இருத்துமேதான் தேய்த்து முழுகு தற்கு
இயல்பாக சீயக்காய் வெந்நீர் வார்த்து
திருத்தமுடன் முழுகிவர யீளை காசம்
சென்றுவிடுஞ் சயரோகக் தாக ரோகம்
அருத்தமுள்ள வெடிசூலை வங்கு சோகை
அடைவான பீனிசங்க ளெல்லாம் போகும்
வருத்தமுள இச்சாபத் தியத்தைத் தள்ளி
மகிழ்வாக முழுகயாக் கோப்சொன் னரே. (36)

வெள்ளேழுத்துத் தயிலம்.

ஆரேதா னின்னமொரு தயிலங் கேளு
ஆடுதின்னுப் பாளைகவு தும்பை மூலம்
கேரேதான் நிழலுணர்த்திக் காய்ந்த பின்பு
நேராகச் சமனிடையா யெடுத்துக் கொண்டு
தேரேதான் முன்போலப் பாண்டத் திட்டு
சிறப்பாக மருந்துமுங்கத் தண்ணீர் விட்டு
சீரேதா னடுப்பேற்றி வற்றக் காய்ச்சி
செயலாக இரண்டுபடி இருத்துக் கொண்டே. (37)

கொண்டேநல் லெண்ணெயொரு படிதான் விட்டு
கூடவே மிளகுமஞ்சள் சாம்பி ராணி
பண்டேதான் பூரமுடன் கோஷ்டங் தானும்
பரிவாகக் காற்பல மதாக வாங்கி
கண்டேதான் நீபொடித்து அதனுட் போட்டு
கணக்காக அடுப்பேற்றி தீயெரித்து
அண்டையிலே தானிருந்து மெழுகுபதவ் கண்டு
அடைவாக நீயிறக்கி யிருத்து வைத்தே. (38)

வைத்ததொரு தயிலத்தைச் சிரசில்த் தேய்த்து
மகிழ்வாக முன்போலே முழுகிக் கொள்ள
மெத்தவே கண்ணில்வந்த மாசி திரும்
வெள்ளைழுத்துக் கண்மங்கல் விலகி யோடும்
பித்தமொடு குனமங்கள் மகோத ரங்கள்
பேசாம லோடிவிடு மிடமில் லாமல்
பத்தமுள்ள யாக்கோபு சொன்ன நீதி
பரிவாக நீயறிந்து பார்த்துக் கொள்ளே. (39)

பச்சவாதத்திற்கு தாரபற்பம்.

பார்த்துமே அரிதாரம் பலமே வாங்கி
பரிவான பழச்சாறு விட்டு ஆட்டி
நேர்த்தியா யுருட்டியதைக் காய வைத்து
நேர்மையுடன் தில்லேப்பால் தனேக்கொணர்ந்து
சிர்த்தியுடன் பிங்கானில் விட்டுப் பின்பு
சிறப்பாக அரிதாரக் கட்டி தன்னே
ஆர்த்தியுடன் தில்லேப்பால் நடுவே வைத்து
அடைவாக வெயிலில்வைக்கப் பற்ப மாமே. (40)

பற்பத்தைச் சிமிழிலே வைத்துக் கொண்டு
பணவிடைதான் தேனதிலே கொண்டா ராஞல்
அற்பமென்று நினையாதே பாங்கிப் புண்கள்
அரிதான சூலையொடு பச்ச வாதம்
சொற்பமாம் நடுக்குவலி தடிப்பும் வெள்ளே
சூலையொடு தழுவணையு மகன்று போகும்
கற்பமது போலாகும இச்சா பத்தியம்
காத்திடவே யாக்கோபு காட்டி ஞரே. (41)

இரத்தப்பிரமேகத்திற்குப் பற்பம்.

காட்டினேன ரத்தசலப் பிரமே கந்தான்
கணக்காகத் தீர்ப்பதற்கு முறையைக் கேளு
நாட்டினிலே சுடலேதனில் வெந்த அஸ்தி
நாளடைவிற் முனெடுத்துக் கொண்டு வந்து
தாட்டிகமாய்ப் பசுவினபால் விட்ட ரைத்து
சரியான வில்லேதட்டிக் காய வைத்து
மேட்டிமைக ளில்லாமல் முழுப்பு டத்தில்
மெய்யாக வைத்தெடுக்கப் பற்பமாச்சே. (42)

ஆச்சேதான் ரத்தப்பிர மேகந் தானும்
அன்பாகக் கொண்டவர்க்கு ஆறு வேளை
கூச்சலிலா துட்டுக்கா கிடைதான் பாலில்
கொடுத்தக்கா லிரத்தப்பிர மேக மோடும்
மாச்சலிலா திம்மருந்து வெளிவி டாதே
வகையாக ஒருவார மிச்சா பத்தியம்
ஏச்சலிலா திருந்திடவே யாக்கோப் சொன்னர்
இயல்பாக தேகவச்சிர காய மாமே. (43)

கர்ப்பத்திற்கு வங்கபற்பம்.

தேகமது நீலைப்பதற்கு வங்கப் பற்பம்
திறமான வெள்வங்கம் ஒருபலந் தான்
பாகமாம் பேரண்டம் ஓடு தன்னில்
பதமாங்காட் டாமணக்கு பருப்புஞ் சேர்த்து
ஏகமாம் வெள்வங்கம் தன்னிற் போட்டு
இயல்பாகக் கவசமது செய்து கொண்டு
யோகமாய் முழப்புடத்தில் வைத்தெடுக்க
உற்பனமாம் வெள்வங்க பற்பந் தானே. (44)

வங்கபற்பம் பணவிடைதான் பசுவின் வெண்ணெய்
வாங்கியே பாக்களவில் பற்பம் வைத்து
கங்கணமாய்த் தான்பொதிந்து சாப்பிட் டாக்கால்
கர்ப்பத்தில் வந்தபெரும் பாடு தீரும்
தங்கம்போற் கேசரிப்பால் தன்னிற் கொள்ள
சகலபயித் தியக்கிருக்குந் தீருந் தீரும்
திங்கள்போல் கர்ப்பமுள்ள மாத ருக்கு
தேடிவந்த ரத்தப்பிர மேகம் போமே. (45)

போமேதான் ஆவின்பால் தன்னிற் பற்பம்
போட்டுமே தான்குழப்பி மூன்று வேளை
தாமேதான் சாப்பிடவே சோகம் போகும்
சரியான பத்தியத்தைச் சொல்லக் கேளு
நாமேதான் கறப்பான்பண் டங்கள் தள்ளி
நயமான இச்சாபத் தியமிருந்தால்
ஆமேதான் தேகமது கற்றா ணுகும்
அன்புடனே மறவாமற் செய்து பாரே. (46)

முகவாதத்திற்கு லேகியம்.

மரவாம லோரிதழ்த்தா மரைச்ச மூலம்
வாங்கிவந்து நிழலுலர்த்திச் சூர ணித்து
திரமாகப் பலம்பத்து நிறுத்துக் கொண்டு
சீரகமும் ஆறுபலந் தானிறுத்து
தரமான சந்தனமும் பலந்தான் மூன்று
தப்பாமற் செஞ்சந்த னந்தா னொன்று
பரகாமற் சூரணித்து வைத்துக் கொண்டு
பலமைந்து கருப்புக்கட்டி பாகு சாச்சே. (47)

பாகுதனிற் சூரணத்தைத் தூவித் தானும்
பசுநெய்தான் படிகாலும் விட்டுக் கிண்டி
வாகுபெற லேகியத்தைப் பதத்தி றக்கி
மண்டலந்தா னுண்டுவர வியாதி தானும்
போகுமே வியாதிகளைச் சொல்லக் கேளு
புகழான முகவாதம் பக்க வாதம்
எகுமே மூடவாதங் கால்கை வாதம்
இயலான வாதந்தீ ருஞ்சொன் னேனே. (48)

படுகாய்த் தயிலம்.

சொன்னதொரு சித்தகத்திச் சாறு நாழி
சுகமான எள்ளெண்ணெய் படிதான் நாழி
முன்னமுள்ள வேம்பாடம் பட்டை தானும்
முதலாகப் பலமொன்று நிறுத்து வாங்கி
கன்னல்போல் மூன்றையுமே ஒன்றுய்ச் சேர்த்து
கடுமையா யிடிப்பெரித்து பதத்தி றக்கி
நன்னயமாய்ப் பழந்துணியி லூட்டிப் புண்ணில்
நாட்டமுடன் போடப்புண் ணுறிப் போமே. (49)

ஆறிவிடு மின்னுமொரு முறைதான் கேளு
அன்பான சீனியுடன் காசுக் கட்டி
நேரிலே வகைக்கிரண்டு களஞ்சு வாங்கி
நேராகக் குழியம்மி தன்னிலிட்டு
பாரிலே பொடிசெய்து சிமிழில் வைத்து
படுகாயத் திற்போட்டுப் பொதிந்து கட்ட
தேறியே குழிப்புண்ணும் ஆறிப் போகும்
சிறப்பாக யாக்கோப்பு திறஞ்சொன் னேனே. (50)

திரமாக இன்னமொரு வகைதான் கேளு
செகத்தோர்க்குத் தெரிந்ததொரு கஞ்சாங் கோரை
தரமாக வாயுதான் பேசி டாமல்
தான்பிடுங்கிக் கொண்டுவந்து வைத்துக் கொண்டு
நிறமான பச்சைமஞ்சள் வீரலி பத்தும்
நேர்மையுடன் மெழுகதுபோற் நூன ரைத்து
உரமான அயக்காரண்டி காய வைத்து
உற்றதேங்கா யெண்ணெய் தானும் விட்டே. (51)

விட்டபின்பு முன்மெழுகு கூடப் போட்டு
மேன்மையுடன் குழப்பியதைக் கிண்டிக் காய்ச்சி
பட்டதொரு படுகாயந் தன்னி லேதான்
பண்புடனே நெற்கனமாய்ப் பொ திந்து கட்ட
மட்டமதாய்ப் புண்ணதுவும் ஆறிப் போகும்
வகையாக ஒருவாரங் கட்ட வேண்டும்
திட்டமதா யாக்கோபு சொன்ன நீதி
திறமாகச் செய்தறிந்து செய்வாய் தானே. (52)

கர்ப்ப மெழுகு.

தானென்ற பிள்ளையு மொன்றிரண்டு பெற்று
தக்கபடி பின்புபிள்ளை யில்லா விட்டால்
காணென்ற மெழுகதுவுஞ் சொல்லக் கேளு
கருவான பொரிக்காரம் பெருங்கா யந்தான்
நானென்ற தேங்காயும் நாற்க ளஞ்சு
நலமுள்ள நெய்வாளங் கொஞ்ச மிட்டு
தேனென்ற பழச்சாறு விட்ட ரைத்துத்
திகழ் சுண்டைக் காயளவா யுண்டை செய்யே. (53)

செய்பாகத் தோடேநீ சிமிழில் வைத்து
சிறப்பாக ஆறுபொழு துண்டா ராகில்
கைபாகத் துடனேதான் கருவுண் டாகும்
கனத்தமக்கள் பதினாறும் பெற்று வாழ்வர்
மெய்பாகத் துடனேதான் பசித்தோர்க் கன்னம்
விளங்கிவர நாளடைவிற் பொருளுஞ் சேரும்
பொய்போகா தென்வார்த்தை செய்து பாரு
பூவுலகோர்க் காகயாக் கோப் சொன்னேனே. (54)

சொன்னபடி செய்தோர்க்கு லாப மூண்டாம்
சுகமாக வயித்தியமுந் தூறி லேதான்
நன்னயமாய்ச் செய்பாகத் துடனே தானும்
நன்மைபெற வெகுமுறைகள் சொல்லி விட்டேன்
முன்னமுள்ள முந்நூறைக் குறுக்கித் தானும்
முக்கியமாய் ஐம்பத்து ஐந்துமட்டும்
கன்னல்போல் வெளியாகத் திறந்து சொன்னேன்
கருவறிந்த யாக்கோபு தான்தான் முற்றே. (55)

வயித்திய சூஸ்திரம் நூறு


முற்றிற்று.

இந்த யாக்கோபு சொல்லிய பதினாறு சாஸ்திரங்களிலும் வியாதிகளுக்குக் கடுமையான சுண்ண செந்தூர பற்பங்கள் செய்துகொடுக்கும்படி சொல்லியிருக்கிறது. இந்த வைத்திய சூஸ்திரம் ஐம்பத்தைந்தில் மட்டும் சுபாகமான மருந்துகளும் சூட்சும வைத்தியங்களுஞ் சொல்லியிருக்கிறார் இதை யொவ்வொருவரும் கவனித்து இம்மருந்துகளைச் செய்து கொடுத்தால் சுலபத்தில் வியாதி தீர்ந்து அனுகூலமாகுமென்று கண்டிருக்கிறது.

கடவுள் துணை.

யாகோபு திருவாய்மலர்ந்தருளிய

இடைபாகம்-யசூ.



காப்பு.

சருவசிவ தயாபரனர் பாதம் போற்றி
சரியான நபிமார்கள் பாதம் போற்றி
பருவமா யெல்லாமும் பாடித் தேர்ந்து
பரிகரித்தே னிடைபாக மில்லை யென்று
கருவமாய்ப் பதினாறு பாட்டாய்ச் சொன்னேன்
கனமான பாகமிதைக் கண்டு கொண்டால்
பெறுவார்கள் பிள்ளைபோல் செம்பு மார்க்கம்
பேசரிது யாக்கோபு சொன்ன வாறே. (1)

சொன்னதொரு சத்துக்கு மார்க்கங் கேளு
சொற்பெரிய துருசில்லாச் சத்து மில்லை
நன்னயமாய்த் துருசுக்கு கெந்தி முக்கால்
நாடியே சேர்த்தரைக்க நல்ல சத்தாம்
கன்னல்போல் செம்பாகுஞ் செம்பெ டுத்தால்
காரியமாய் ரசிதனிலே வேதை யாகும்
இன்னிலத்தி லின்னிறைக்கிச் செய்யப் போனால்
யிதமான வர்ணமில்லை யென்று பாரே. (1)

இயன்றுபார் துருசுக்குக் கெந்தி தானும்
யிதமாக யிடைபாகந் தப்பி றெம்ப
அயன்றுமே சேத்தாக்கால் சத்து தானும்
அடைவாகப் புடம்போட்டு உருக்கிப் பார்த்தால்
நயன்றுமே கறப்பாகும் யிச்சத்தில் தான்
நயமில்லை செம்புதான் வரமாட் டாது
கயன்றுமே வெகுபாடு பட்டு ருக்க
கனிவான செம்பெடுத்தால் வர்ணங் கேளே. (2)

வருணமென்ன கொஞ்சம்போற் காணும் பாரு
வகையான தங்கத்தைச் சேத்தாற் கேளு
கரணமாய்க் கொஞ்சமாய் லாபங் காணும்
கனமாக யிப்படிக்கிச் செய்யா மற்றுன்
தருணமாய்த் தருசுக்கு முக்கால்கெந்தி
தாட்டிகமாச் சேத்தரை பழச்சாற் ருலே
பரணமாய் வில்லைகட்டி முன்னூல்சொன்ன
படியாகப் போட்டுமே சொல்லக் கேளே. (3)

சொல்லவே போட்டவுடன் சுறப்பாய் நிற்கும்
துடியாக வெங்காரஞ் சேர்த்த றைத்து
நல்லவே புடமிட்டுக் குகையி லிட்டு
நாடியே உருக்காதே நாளுக் தன்னில்
மெல்லவே உருக்கிடவே செம்பு மாகும்
மேதினியி லிப்படிக்கிச் செய்யாப் போனுல்
கல்லவே செம்புதான் வராமட் டாது
கருணைபெறநூல் பொய்யாய்ப் போகுந் தானே. (4)

பேசாமல் முன்சொன்னமுறையைப் போலே
போக்கொடே முன்சுணக்குப் போலே சத்து
வாகாம லெடுத்துமே செம்பெடுத்தால்
வகையான வெள்ளிக்கிப் பரிட்சை கேளு
தாகாமல் வெள்ளிதனைக் கடையில் வாங்கி
தாட்டிகமா யதைகும்பிச் செம்பு தன்னை
ஏகாமற் கொடுக்குவே வேண்டா மென்று
யிருந்துரைத்தார் யாகோபு யிதமாய்த் தானே. (5)

இதமாக வெள்ளிக்கி யிடையே வங்கம்
ஏத்தமாய்க் கொடுத்தாது பின்பு நீயும்
அதமாக அதையெடுத்து ஆட்டெ லும்பில்
அடைவாக வைத்துமே சுணக்கா யூது
விதமாகக் கொஞ்சமெடு கரியில் வைத்து
வீற்றிருந்து உருக்கிப்பா ரீயம் நின்ருல்
பதமாகக் குதித்தாடும் பருவம் கண்டு
பதையாமல் பின்னுமே வூதித்தீரே. (6)

ஊதிட்டு வெள்ளிதனை யெடுத்துப் பாரு
உத்தமே சாம்பல்வர்ணங் கண்டாற் கேளு
காதிட்டுச் செம்பிருக்கும் பின்னும் நீயும்
கருதியே வங்கத்தைக் கொடுத்து ஊது
நாதிட்டு எடுத்துமே உருக்கிக் கொண்டு
நலமாகக் கரியில்வைத்துக் காச்சிப் பாரு
சேதிட்டு யியந்தா னிருந்து தென்றால்
சிறப்பாக யிடைக்குமது சிறப்பைக் கேளே. (7)

சிறப்பாகச் செம்பிருந்தால் சாம்பல் வர்ணம்
செழுமையா யிக்குற்றம் நீக்கிப் பின்பு
அறப்பாக முன்னெடுத்த சத்துச் செம்பை
அன்பாக யெட்டுக்கு ரெண்டு சேரு
குறிப்பாகப் பொனபோலே உருகி யாடும்
கொள்கைகண்டு பின்னுமதை யெடுத்து நீயும்
விறிப்பாக மட்டமிடை தங்கந் தாக்கு
விதமாகச் சேத்துருக்கி யெடுத்துக் கொள்ளே. (8)

எடுத்துமே பார்த்தவுடன் தாயைப் போல
யிதமாக யிருந்துவிடும யில்லாப் போனால்
அடுத்துமே நீபோட்ட மட்டத்துக்கு
அடைவாகத் தங்கமது பாதி சேர்த்தால்
படுத்துவிடு மாத்தலுவுங் காணும் பாரு
பகையாகும் புடத்துக்குத் தங்க மில்லை
உடுத்துமே வாதந்தான் மிகவுஞ் சுட்டு
ஊதாரியா யலைந்து உலகு வானே. (9)

தங்க சுத்தி.

உலையாமல் தங்கத்தை மிகவுஞ் சேர்த்து
ஒதினது போலேதா னெழுங்கு பண்ணு
அலையாமல் தங்கசுத்தி தன்னைக் கேளு
ஆதியாந் தங்கத்தைத் தகடி தட்டி
கலையாமல் பழச்சாறு கற்காவி தன்னே
காணவே மிகவரைத்துத் தகட்டிற் பூசி
நிலையாகக் கறியோட்டிற் காச்சி நீயும்
நேராக அதின்குழம்பில் தோய்த்தி டாயே. (10)

தோச்சிட்டுத் தங்கத்தைத் தட்டிப் பாரு
தூளாக யிரண்டாக முறியுங் கண்டாய்
வாச்சிட்டு தென்றுசொல்லி மனதி லெண்ணி
வகையான மட்டம்வந்த யிடத்தில் நீயும்
பாச்சிட்டுச் சேர்த்துமே உருக்கிப் பாரு
பதிவாகத் தங்கமாம் பாரி லோர்க்கு
ஏச்சிட்டுத் திரியாமல்ப் பாக மாக
யிதமாகச் செய்திடவே யியற்கை யாமே. (11)

இயற்கையா யிப்படிக்கிச் செய்து நீயும்
யேற்றமாய்ப் புடம்போட அருகு கட்டும்
அயற்கையிலாச் செய்துவர ஒன்று தப்பில்
அனுதியாய் மட்டமெல்லாம் வீணாய்ப் போகும்
கயற்கையாய் பஞ்சமித்திர முந்நூறு தன்னில்
காரணமாய்ச் சொல்லிவிட்டேன் கண்டு கொள்ளு
நயற்கையாய் சத்தெடுத்துச் செம்பெ டுத்தால்
நயமாக யிப்படிக்கிச் செய்திடாயே. (12)

செய்திடவே யென்னூல்கள்பதி னேழ் தன்னில்
சிறப்பாகச் சத்தெடுக்கக் கெந்தி சொன்னேன்
பைதிடவே கெந்தியைத்தான் அதிக மாகப்
பதமாகச் சேர்த்தாக்கால் முருக்குப் போலே
கைதிடவே தூளாகுஞ் செம்பு தானும்
நலமாக உருகாது காட்டி லோர்க்கு
உய்திடவே யிந்நூலு பதினேறு தன்னில்
ஓதினேன் கணக்கறிந்து யிதமாய்ச் செய்யே. (13)

இதமாகச் சுண்ணமென்ற அறுநூறு தன்னில்
யியற்கையாய் நீத்தினத்தை எளிதிற் சொன்னேன்
அதமாகத் துரிசினுட சுண்ணம் வைத்தால்
அடவாகக் கோடிலெச்சம் நிமைமுன் தாண்டும்
பதமாக நவலோக மெல்லாந் தானும்
படுமுன்னே பழுத்துவிடும் பாரி லோர்க்கு
அதிகமாய் நபிமார்க்குச் சுண்ண வேலை
யாகுமென்று யாகோபு சொன்னார் பாரே. (14)

ஆகுமே சத்துள்ள செம்பெ டுத்தால்
அடவாக உலகத்தோர்க் காகும் பாரு
வாகுமே யிந்தநூல் பதினாறு தன்னில்
வடிவாகச் சொல்லிவிட்டேன் வழக்கங் கண்டு
தாகுமே சத்தினுட செம்ப றிந்து
தாய்சேர்க்கும் வகையறிந்து செத்தா னுரல்
பாகுபெற ராசாவா யிவனி ருப்பான்
பக்குவமாய்ச் செய்தாக்கால் பலனுண் டாமே. (15)

பலமுண்டாஞ் செய்பாக வரிசை யோடு
பக்குவமாய் நூல்வழியின் முறையே செய்தால்
நலமுண்டாம் பற்பஞ் செந்தூரத் தோடு
நல்லதொரு வகாரமதைத் தெரியாமற் றான்
நிலமதனிற் றானிருந்து மூடிக்கவேண்டும்
நீணிலத்தி னுனக்கீடு உண்டோசொல்லு
தலமதனிற் போய்கொண்டு யாக்கோப்சொன்ன
சங்கதிகள் பொய்போகா பதினாறுமுற்றே (16)

இடைபாகம்—ரசு.

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

யாக்கோபு திருவாய்மலர்ந்தருளிய

செய்பாகம் - யசூ.

காப்பு.

அண்டபிண்டந் தானிறைத்த வெளியைப் போற்றி
அன்பான ரகுமானின் பாதம் போற்றி
கண்டமிழ்நா தாக்களுட பாதம் போற்றி
தாயான பராபரையா ளருளினாலே
கண்டுமே நான்செய்த நூல்கடன்னில்
கைபாக வரிசைதனைக் காட்டு தற்கு
மண்டலத்தி லெந்தனுக்கு உபதே சித்த
மகாகுபிமார் பாதமதை வணங்கிப் போற்றே.

போற்றியே கைபாகஞ் சொல்லக் கேளு
பூதலத்து மாண்பகளில் வெகுபேரப்பா
ஏற்றியே இடைபாகம் கைபாகங்கள்
இயல்பாகத் தெரியாமல் மருந்தைச் சுட்டு
சேற்றிலே விழுந்தெழுந்த வன்போ லாகத்
தேசமெங்குஞ் சுற்றியே திரிந்துகொண்டு
நாற்றிசையுஞ் சித்தனெனப் பேயர்வ கித்து
நாட்டிலே திரிந்தலைவார் வெகுபேர் தானே. (1)

தானென்ற கெவுரி லிங்கம் சூதந் தானும்
தாளகமும் தருசுமனை சிலையினோடு
நானென்ற கெந்தகமும் பாஷா ணங்கள்
நலமான வீரமொடு பூரந் தானும்
வேனென்ற புகைச் சரக்கு யிவைக ளாகும்
மேதினியோர் வகையில்லாப் புடத்தி லிட்டு
வானென்றே புகைத்துவிட்டு வெளியாய்ப் போனர்
மகத்தான கைபாக வரிசை தானே. (2)

தானென்ற தங்கம் வெள்ளி செம்பு வங்கம்
சரியான வெள்வங்கம் அயமும் நாகம்
தேனென்ற குடவன்வெங்கலமுந் தானும்
செயமான உருக்கினங்க ளாகும் பாரு
நானென்ற திவையாவும் பற்பம் சுண்ணம்
நலமான செந்தூர மாக வென்றூல்
கோனென்ற குருமுறையும் இடைபா கங்கள்
குறிப்பாக கைபாக வரிசை பாரே. (3)

பாரேதீ புகைச்சரக்கும் உருக்கி னமும்
பக்குவமா யொவ்வொன் றும் பாக மாக
நேரேதான் துண்டுதுண்டாய் சுத்திசெய்து
நேர்மையுடன் தானெடுத்து வைத்துக்கொண்டு
தேரேதான் பஞ்சமித் திரங்கள் செய்து
சீராகச் சுண்ணமது செய்ய வென்றூல்
வேரேதான் அறுநூறு சுண்ணந்தன்னில்
மிகவேதான் கண்டபடி விடாமற் செய்யே. (4)

செய்துவரப் பாகமது தவறிப்போனால்
சிறப்பாகச் சுண்ணமூந் நூறும் பாரு
உய்வதற்கு இடைபாகந் தவறிற் றூனால்
உண்மையாய் நூற்றியைப்பத் தைந்தும் பாரு
மெய்யாகப் புடத்திற்சந் தேகம் வந்தால்
மிகவேதான் ஐம்பத்தி ஏழிற் றூனும்
கைபாக மிதுதான்பார் சொல்லி வைத்தேன்
காசினியில் யாக்கோபு திடமாய்த்தானே. (5)

திடமாகச் சுண்ணமது செய்வ தற்குச்
சேர்ந்ததொரு நூலதுவுந் தெரியச் செய்தேன்
புடமாறிப் போயதுவுங் கறுத்ததானால்
புண்பட்டு வெளியேதா னெறிந்திடாதே
அடவாகச் சுண்ணமது முடிவ தற்கு
அன்பாகநூல் நாலுஞ் சொல்லி வைத்தேன்
பெடமாக நூலிலுட போக்க றிந்து
பேணியே மறுபடியும் புடந்தான் போடே. (6)

மறுபடியும் குறைநிறையச் சரிய தாக்கி
வலுவாகப் புடம்போட்டு யெடுத்த யானால்
சரியான மல்லிகைப்பூப் போலே சுண்ணம்
தானுகும் வாச்சுதென்று யெடுத்து கொள்வாய்
திருவான பெரியோர்க்கு அன்னதானஞ்
செய்துவர யெடுத்தகா ரியங்கை கூடும்
குருவாக யாகோபு வெளியாய்ச் சொன்னேன்
குவலியத்தோர் பொறுத்தருளக் கூறி னேனே. (7)

பொருத்தமுள்ள செந்தூரம் செய்ய வென்றால்
புகழான எழுநூற்றின் படியே செய்வாய்
திருத்தமுள்ள கைபாகந் தவறிக் கெட்டால்
செந்தூர முந்நூற்றில் தேறிச்செய்வாய்
அருத்தமுள்ள ததுவினிலே பிசகிற் றானால்
அன்பான நூற்றிஐம்பத் தைந்து தன்னே
கருத்தாக சொல்லிவைத்தேன் கூர்ந்து பார்த்து
கணக்காக அதின்படியே போற்றிச் செய்யே. (8)

போற்றியே செய்துவரப் பாகந் தப்பில்
புகழான நுணுக்கமது தெரிவ தற்கு
தேற்றியே ஐம்பத்தைந் ததிலே தானும்
செய்பாக வரிசையுடன் சொல்லி விட்டேன்
ஏற்றியே யிந்நான்கு நூலைத் தானும்
இனிமையுடன் பார்த்தாக்கால் செந்தூரங்கள்
நாற்றிசையோ நறிவே செய்து கொள்வாய்
நாதாந்த யாக்கோபு சொன்னேன் பாரே. (9)

சொன்னதொரு செந்தூரஞ் செய்யும் போது
சுகமான செந்தூர மாகா மற்றுன்
பின்னமது தானுகிக் கரியதாகிப்
பேசரிய செந்தூரங் கெட்டதானால்
முன்னமே வேலைசெய்து வைத்ததெல்லாம்
மூதண்டக் கோபத்தா லெறிந்தி டாதே
நன்னயமாய்ச் செந்தூர முடிவ தற்கு
நான்குநூல் சொல்லிவைத்தேன் நன்றுப்பாரே. (10)

நன்முக நூல்தனையும் உற்றுப் பாரு
நன்மைபெற இடைபாகம் புடபா கங்கள்
குன்முமல்ச் சரியாகச் செய்து தானும்
கொண்டுவரும் போதினிலே கெட்ட தானல்
ஒன்முலும் பலவானும் யெறிந்தி டாதே
உண்மையுடன் அந்தந்த நூலைப் பார்த்து
மன்முடி அமமருந்தைப் புடத்தில்வைக்க
வாச்சுவிடுஞ் செந்தூர மகிமை பாரே. (11)

செந்தூரஞ் சுண்ணமுந்தான் செய்யுதற்கு
சிறப்பான வழிதனையுஞ் சொல்லிவிட்டேன்
கொந்துகொந்தாய் வகாரமது செய்யு தற்குக்
குறிப்பாக பஞ்சமித்திர முந்நூறு சொன்னேன்
வந்தந்த நூல்தனிலே வகார வேலை
மகாசுழிவாய்ச் செய்வதற்கு வழியுஞ் சொன்னேன்
மூந்தந்த நூலினுட முறையே செய்தால்
முக்கியமாய் வகாரமது முடியுந்தானே. (12)

முடியயிலே பக்குவங்கள் வாராதே போனல்
முந்நூறு வகாரத்தின் களங்கைப் பாரு
கடிகையதிற் முன்முடியும் தவறிற்முனல்
களங்கினுட சூத்திரமைம்பதுவும் பாரு
படிகம்போற்முன்முடியும் வினையத் தோடு
பார்த்திடுவா யிடைபாகம் பதினு றைத்தான்
திடியான மாற்றதுவும் வந்தே தோறும்
சொல்லி விட்டேன் யாக்கோபு துணிவாய்ப்பாரே. (13)

பாரேநீ வயித்தியங்கள் செய்யு தற்குப்
பரிவாக நாநூறு விரித்துச் சொன்னேன்
தேரேதா னதைக்குறுக்கி முந்நூறுஞ் சொன்னேன்
சித்தான தண்டகமாம் நூற்றிப் பத்தும்
நேரேதான் சொல்லிவிட்டே னதைக் குறுக்கி
நேர்த்தியாய் ஐம்பத்தி யைந்துஞ் சொன்னேன்
வேரேதான் மருந்துகளுங் கெட்டுப் போனல்
மேலான எழுநூற்றின் சத்தைப் பாரே. (14)

சத்தான நால்நூலும் பார்த்துச்கொண்டால்ச்
சரியாக வகாரமது முடியு மப்பா
சித்தான திராவகங்கள் செய்யு தற்குச்
சிறப்பான யெழுநூற்றை விடவேறில்லை
முத்தான வயித்தியங்கள் செய்புதற்கு
முக்கியமாம் லேகியங்கள் பதங்கம் மாத்தை
வித்தான தயிலமொடி குழம்பு சூர்ணம்
மெழுகுடனே கியாழமது செய்யக் கேளே. (15)

செய்யவே பதினறு நூலும் பார்த்து
தேறியே மருந்துகளுஞ் செய்ய வேண்டும்
உய்யவே நூலினுட நுட்பங் கண்டு
உண்மைகண்டு இடைபாகம் புடமுங் கண்டு
பையவே கைபாகஞ் செய்பா கங்கள்
பார்த்தறிந்து மருந்துகளேச் செய்வா யென்று
ஐயமிலா யாகோபு உலகத் தோர்க்கு
அருமையாய்ச் சொல்லிவைத்தேன் பதினறு முற்றே.

செய்பாகம்—ரூ.
முற்றிற்று.

இராமதேவராயிருந்து மக்கத்திற்குப் போனபின்பு யாகோபுஎன்று போவகித்து சொல்லிய சாஸ்திரங்கள்

வைத்திய சிந்தாமணி எழு நூறும், சூஸ்திரம் 50-ம்	1	2	0
லோகசெந்தூரம் 300	0	8	0
ஷிசூஸ்திரம் 155ம் சுண்ண சூஸ்திரம் 57ம்சேர்ந்தது	0	7	0
சுண்ணசாண்டம் 600	1	0	0
சுண்ணம் 300	0	8	0
ஷி சூஸ்திரம் 155ம் செந் தூர சூஸ்திரம்55ம்சேர்ந்து	0	7	0
பஞ்சமித்திரம் 300	0	8	0
வாதவைத்தியகளங்கு 300	0	8	0
வாதவைத்தியம் 400	0	12	0
ஷை வைத்தியம் 300	0	8	0
ஷிதண்டகபட்சணி 110ம் வைத்திய சூஸ்திரம்55ம் இடைபாகம் 16ம் செய்பா கம் 16ம் சேர்ந்தது	0	7	0
இந்தப் பதினேழுதாலுக்குந் திறவுகோலாகியபயாக்காபு கல்லாடர் அரும்பதவுரை	0	12	0

அச்சிட்டுத் தயாரிலிருக்கிற

பதினெண் சித்தர் யோக ஞான சாஸ்திரங்கள்.

1-வதுபாகம் திருமூலர்சுப் பிரமணியர்முதலானசித் தர்கள் ஞானக்கோர்வை	1	0	0
2-வதுபாகம் போகர் காலா ங்கி முதலான சித்தர்கள் ஞானக்கோர்வை	1	0	0
3-வதுபாகம் கடைப்பிள்ளை புசுண்டர் முதலான சித் தர்கள்ஞானக்கோர்வை	1	0	0
4-வதுபாகம் மச்சமுனிவர் முதலான சித்தாகள் ஞானக்கோர்வை	1	0	0
5-வதுபாகம் சுந்தரானந்தர் முதலான சித்தர்கள ஞா னக் கோர்வை	1	0	0
6-வதுபாகம்,இராமதேவர் முதலான சித்தர்கள் ஞா னக் கோர்வை	1	0	0
7-வதுபாகம் சட்டமுனி முதலான சித்தர்கள் ஞா னக் கோர்வை	1	0	0
8-வது பாகம் உரோமரிஷி யார் முதலான சித்தர்கள் ஞானக்கோர்வை	1	0	0
9-வது பாகம் கருஞ்சார் முதலான சித்தர்கள் ஞா னக் கோர்வை	1	0	0
10-வது அகஸ்தியர் கோர் வை	1	0	0

ஒன்பது விஷவைத்தியம்.

தண்வந்திரி கெருடாரூடம் மந்திர சக்கரங்களுடன் 100-பாடல்	0	6	0
ஷை கெருட பஞ்சாக்ஷர ஆரூடம் திருநீல கண்டர் மந்திர சக்கரங்களுடன்	0	6	0
அகஸ்தியர் சத்தியாரூடம் மந்திர சக்கரங்களுடன் 100-பாடல்	0	6	0
சிவாரூடம் மந்திர சக்கரங் களுடன் 100-பாடல்	0	6	0
பதஞ்சலி தேவியாரூடம் மந்திர சக்கரங்களுடன் 140-பாடல்	0	3	0
உரோமரிஷி நாகராரூடம் மந்திர சக்கரங்களுடன் 100-பாடல்	0	6	0
சித்தராரூடம்மந்திரசக்கர ங்களுடன் 100-பாடல்	0	6	0
கௌசிகர் சர்ப்பராரூடம் மந்திர சக்கரங்களுடன் 100-பாடல்	0	6	0
ஷி மந்திராரூடம் மந்திர சக்கரங்களுடன்	0	6	0
மேற்கூறிய இந்த ஒன்பது ஆரூடமும் ஒன்றாகச் சேர் ந்ததுகாலிகோபயிண்டு	1	8	0
மலையாள மாந்திரீகம்	0	12	0
கந்தரனுபூதிசக்கரமுடன்	0	4	0

இ. ராம. குருசாமிக்கோன், புக்ஷாப், புதுமண்டபம் மதுரை.

பரமபதி துணை.

NEW CATALOGUE OF BOOKS.

புதிய புத்தகக் கேட்லாக்

இ. ராம. குருசாமிக்கோனூர் வன்

புத்தகஷாப் புதுமண்டப்பம், மதுரை.

பச்சிலை மூலிகைகளின் தமிழ்ச்

சித்தவைத்திய அகராதி.

(இது ஓர் வைத்திய பெரிய அகராதி.)

இதில் பச்சிலை, கடைச்சரக்கு, பஞ்ச பூதச்சரக்கு, உபரசச்சரக்கு 120 பரிபாஷைப் பெயர்கள், 5 உப்புவகை இனங்களையும், உப்பாகுஞ் சரக்குகளின் விபரத்தையும் வகாரம், செந்தூராஞ் செய்ய சரக்குகளின் உருக்கின சத்துருமித்துருவையும், புளியாகும் சரக்குகளின் விபரத்தையும், 64-பாஷாணங்களின் பெயர்களையும், அவைகளின் சத்துரு மித்துருவையும், நிகண்டுகளின் பரிபாஷைப் பெயர்களையும் விபரமாய்க் கூறியுள்ளது சித்தர் நூல்கள் ஆராய்ச்சிசெய்வோர்களும், வைத்தியஞ்செய்ய ஆரம்பஞ் செய்வோர்களும் இப்புத்தகத்தை வாங்கிப் பார்க்க வேண்டியது அவசியமாகையால் ஒவ்வொருவரும் வாங்கிப்படித்துப் பார்த்து, இதின் உண்மையை அறிந்து மருந்துகள் செய்து பயனடையக் கோறுகிறேன். 280-பக்கங்கள்கொண்ட கலிக்கோபயிண்டு சுத்த பதிப்பு

புத்தகம் 1-க்கு விலை ரூ. 2—0—0

திருவள்ளுவர்கற்பம் 300

இதில் நாதாந்த சாரம் 100. கற்பக்குருநூல் 50. மூப்பு சூஸ்திரம் 30. வாத சூஸ்திரம் 16. மூப்புச்குரு 11 வைத்தியசூஸ்திரம் 100 ஆக 7-சாஸ்திரங்கள் அடங்கியது. திருவள்ளுவர் பாடிய ஞானவெட்டி 1500க்கு சூஸ்திரமாகப் பாடியுள்ள சாஸ்திரம் இதுவேயாகும். இதில் குருமுடிக்கும் பாகங்களும், செயநீர் முடிக்கும் பாகங்களும் பூநீர் விபரங்களும், அபூர்த தாரணையின் நுட்பமும் மூப்பு இன்னதென்ற விபரமும், வழிலமார்க்கமும் தெளிவாகக்கூறியுள்ளது புத்தகம் 1-க்கு விலை ரூ 0—14—0

யூகிமுனிவர் 1200

கும்மி 1000, பரிபூரணம் 200 இரண்டும் சேர்ந்தது.

இம்முனிவரால் பாடியுள்ள சாஸ்திரங்கள் அநேகமாயிருப்பினும் ஒவ்வொரு நூல்களும் ஒவ்வொருவர் கையடக்கமாய் வெளிவராமல் இருந்ததில் இந்த சாஸ்திரங்கள்மட்டும் என்னிடம் கிடைக்கப்பெற்று உலக நன்மையைக் கருதி அச்சிட்டு வெளியாக்கியுள்ளேன். இதில் வாதம், வைத்தியம். ஞானம், மூப்பு விபரங்கள் கூறியிருக்கின்றன. கலிக்கோ பயிண்டு புஸ்தகம் 1-க்கு விலை ரூ 2—0—0

இராமதேவர் வைத்திய காவியம் 1000

இதில் கற்பமுறைகளும், சத்துரு மித்துருச் சரக்குகளும், தைலமுறைகளும், வைத்தியமுறைகளும், அஷ்டகர்ம விபரங்களும், கருமான விபரங்களும், பஞ்சபூதங்களின்விபரமும், பற்பம்செந்தூரம், சுண்ணம் செய்முறை பாகங்களும், அஷ்டாங்க யோக முறைகளும், ஞானங்களும் கூறியிருக்கிறது புஸ்தகம் 1க்கு விலை 1—0—0

குரு. இராமசாமிக் கோன், புக்ஷாப் புதுமண்டபம் மதுரை.

அகஸ்தியர் கௌமதி நூல்

இந்த சாஸ்திரம் இதுவரை வெளிவராமல் பழைய ஏட்டுப்பிரதி யாக ஒரு சுவாமியாரிடமிருந்தது ஷெயார் ஒருவருக்கும் வெளியி டாமல்தன்னனுபவத்தில் வைத்துக்கையாண்டுவந்ததை மகா-ஸ்ரீ-ஸ்ரீ இ. ராம. குருசாமிக்கோனரவர்கள் சுவாமியாரிடம் போய் வேண்டும் பொருள் கொடுத்து வாங்கி அதைப் பிரதி பண்ணி யாவரும்பார்த்துப் பயனடையுமாறு அச்சிட்டு வெளியிடப்பட்டது. வைத்தியம், வாதம் மாந்திரீகம் முதலான பாகங்கள் சுருக்க முறைகளாகச் சொல்லியிருக்கி றது. வெகு அருமையான சாஸ்திரம்

புத்தகம் 1க்கு விலை அணு 0—12—0

அகஸ்தியர் பன்னீரா யிரத்துக்குச் சூஸ்திரமான

பன்னிருகாண்டம்.

இது அகஸ்தியர் பன்னீரா யிரத்துக்குச் சூஸ்திர மாகப் பன்னிருகாண்டங்களாகப் பாடியுள்ள சாஸ்திரம் 1.-வது வைத்திய காண்டம் 2.-வது வாத காண்டம் 3.-வது சுண்ணக்காண்டம். 4.-வது செந்தூரக்காண்டம் 5.-வது பற்பகாண்டம் 6.-வது தைலக் காண்டம் 7.-வது கற்ப காண்டம். 8.-வது யோக ஞான காண்டம். 9.-வது தீட்சாவிதி காண்டம். 10.-வது சாபநிவர்த்தி காண்டம் 11-வது ஜாலகாண்டம். 12-வது மந்திர காண்டம். ஆக பன்னிருகாண்டம் சுருக்க சூஸ்திரமாயுள்ளது.

புஸ்தகம் 1-க்கு விலை ரூ 0—10—0

அகஸ்தியர் கற்ப மூப்புக் குரு நூல்

இதில் கற்ப விதிகளும் மூப்பு மூடிக்கும் விபரமும் பற்பம் செந்தூர பைபாகஞ் செய்பாக முறைகளும் சுண் ணம் மெழுகு தைலம் வாலை பூசை நாற்பத்தி முக்கோண சக்கரத்தின் பூஜா விதிகளும் கற்ப தீட்சை முறைகளும் தெளிவாகச் சொல்லி யுள்ள சாஸ்திரம்.

புஸ்தகம் 1-க்கு விலை ரூ 0—10—0

இதுவரை எட்டுப்பிரதியாயிருந்து புதிதாக அச்சிட்ட

அகத்தியர்பரிபூரணம் 1200

இந்நூல் ஞானம், யோகம், இன்னதென்று அவரவர்களே எளிதாகத் தெரிந்துகொள்வதோடு தன்னைத்தானறிந்து ஞான யோக சாதனையடைந்து வெகுகாலம் ஜீவித்திருக்கவும், கற்பதேகி யாகவும், அநேக வைத்தியம், வாதம், சத்துரு-மித்துருவிபரங்கள்சொல்லியுள்ளது புதிய சாஸ்திரம். கலிக்கோ பயிண்டு விலை ரூ 2—0—0

அகஸ்தியர் தற்ச சாஸ்திரம்

இத அகத்திய முனிவரால் புலத்தியருக்கு உபதேசஞ் செய்தது இதில் பதினெண் சித்தர்களாலும் பாடிய வைத்திய வாத யோகஞான நூல்களின் பரிபாஷைப் பெயர்களையும், அநேக மர்மங்களுக்குதாத்பரியங்களையும் விபரமாகக் கூறியிருக்கிறது. விலை அணு 0-10-0

17-சாஸ்திரம் அடங்கிய இராமதேவரென்ற

யாகோபுவைத்திய கோர்வை

இராமதேவ ரிஷியாக இருந்துபின்பு மக்காவுக்குசென்றுபிமார்களுடன் பேசி அவர்கள் இவர் திறமையையும் சாஸ்திர ஆராய்ச்சியும் தெரிந்து யாகோபு என்று பெயர்கொடுத்தார்கள். பின்பு யூனிமுறைகளையும், தமிழ், முறைகளையும் கவனித்து அநேக வைத்தியங்களும், வாதம், யோகமுறைகளும், ஞானமும், நாடி விபரமும், சரக்குச்சுத்திகளையும், 17-சாஸ்திரங்களாகப் பாடியிருக்கிறார். இந்த சாஸ்திரத்தை அநேகர்வாங்கி செம்ப அனுபவ முறையாகக் கையாண்டு வருகிறார்கள் 17-சாஸ்திரம் சேர்ந்த கலிக்கோபயிண்டு விலை ரூ 9—0—0

இத்தப் பதினேழு சாஸ்திரங்களையும் பனிரெண்டு புஸ்தகங்களாக தனித்தனியாகவும் பயிண்டுசெய்திருப்பதால் வேண்டியவர்கள் தனித்தனிப்பிரதியாகவும் கிரையத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

கொங்கணர் நடுக்காண்டம் 500

கொங்கணர் பாடியுள்ள மூக்காண்டம் 1500ரில் கடைக்காண்டம் 500 கிடைத்ததை மாத்திரம் வெகுகாளாக அச்சிட்டு விற்பனையாகி வருவது யாவருக்கும் தெரிந்தவிஷயம். பாக்கியுள்ள முதல்காண்டம் 500ம், நடுக்காண்டம் 500ம் வெகுகாலமாகக் கிடைக்காம லிருந்து இப்பொழுது ஒரு எட்டுப்பிரதி நடுக்காண்டம் 500 மாத்திரம் கிடைத்து. அதை அச்சிட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. அநேக கனவான்கள் பார்க்கவேணுமென்று எதிர்பார்த்திருந்த அரிய சாஸ்திரங்களில் இதுவும் ஒன்றேயாகும். புத்தகம். 1-க்கு விலைஅணு 0—12—0

கருவூரார் வாதகாவியம் நொண்டி 700

இதில் கற்பம், வயித்தியம், வாதம், ஞானம், யோகமுதலிய பாகங்களை கொண்டிச் சிந்தாகவும், ஆனந்தக் களிப்பாகவும், அம்மானைப் பாவாகவும், சிந்தாகவும் இம்மாதிரி பல வர்ணமெட்டுகளாய் வேடிக்கை விநோதமாகச் சூட்சமாய்ச் சொல்லிய சாஸ்திரம்.

புஸ்தகம் விலை ரூபாய் 0—14—0

விஷவைத்திய மென்னும்

"ஒன்பதுவிஷ ஆரூடம்"

இதில் ஒன்பதுவிதமான விஷ ஆரூடசாஸ்திரங்களைச்சேர்த்து ஒரே புத்தகமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. பாம்பு. தேள், நட்டுவக்காளி, நூரான், செய்யான், வண்டு, அரணை, எலி, காய்,குரங்கு, நூனை, முதலானவைகள் கடித்து விஷமேற்பட்டால் பச்சிலை மூலிகைகளினாலும், கடைச்சரக்குகளினாலும், விஷத்தை நீக்குவதற்குலகுவான முறைகளாய்ச் சமயோசிதம்போல் செய்வதற்கான விதமாய்க் கூறியிருப்பதோடு மந்திர யந்திர பூஜாவிதிகளும், விபரமாய்ச் சொல்லியிருக்கிறது எமது மூதாதைகள் கையாண்டு அநுபவித்துவந்த உண்மையான சாஸ்திரம். சுத்தப்பதிப்பு 392-பக்கங்கள் கொண்டகலிக்கோ பயிண்டு.

பெரிய புஸ்தகம் 1-க்கு விலை ரூபாய் 2...0...0

ஆரு. இராமசாமிக்கோன் புக்ஷாப் புதுமண்டபம், மதுரை

காக புசுண்டர் 1000

சித்தர்களில் ஒருவராகிய புசுண்ட மகாரிஷி என்பவர் பிரளய காலத்தில் கல்லாலின்மேல் இருந்து ஒவ்வொரு பிரளய காலமும் பார்த்துவந்தவர். இவர் அநேகசாஸ்திரம் பாடியிருக்கிறார். ஆனல் இது வரை சில சாஸ்திரமட்டும் அச்சுக்கு வந்திருக்கிறது. ஷியாரால் பாடியதில் முக்கியமான இப்புசுண்டர் பெருநூல் காவியம் 1000. இது வரை ஏட்டுப்பிரதியாயிருந்து இப்போதுதான் புதிதாக அச்சிட்டிருக் கிறது. இதில் யோகம். ஞானம் அமுதகாரணை வாசி விபரமும் கற்பம் என்பது தன்னுள்ளே முடிந்திருக்கிறது என்ற விபரமும் முதலிய இன்னும் அநேக மர்மங்களும் அடங்கியுள்ள சாஸ்திரம். 250-பக்கம் கொண்ட கலிக்கோ பயிண்டு. புஸ்தகம் விலை ரூ 2—0—0

போகர் கற்பம் 300.

இதில் அமுரி கற்பம் சாப்பிடும் விதமும் அந்த அமுரி கற்பத்தை எந்த விதத்தில் முரித்துச் சாப்பிடு கிறது என்பதும் அதை யெந்த பாத்திரத்தில் உப யோகிப்ப தென்பதும் கற்பம் சாப்பிடுங் காலத்தில் ஏற்ப டக்கூடிய சூடு சோப தாபங்களுக்கு வேண்டிய கஷாயங் களும் அதுசமயம் ஸ்நானம் செய்யும் முறையும் பத்திய முரிவு யேற்பட்டால் அதற்கு வேண்டிய பக்குவங்களும் கற்பம் சாப்பிடும் போது புளி உப்பு பெண்போகம் கூடா தென்பதின் காரணமும் அங்குற்றங்க ளேற்பட்டால் அத ற்கான சிகிச்சை செய்துகொள்ள வேண்டிய வகையும் கற்ப மூலிகை விபரங்களும் கருந்துளசி கருநெல்லி கரு நொச்சி இவைகளை நாமே உண்டு பண்ணிக்கொள்ள வேண்டிய முறையும் வாத முறைகளுக்குத் தைல வகை களும் சுத்தி முறைகளும் சிதம்பரத்தில் தங்க விக்கிரகம் செய்த விபரமும் சொல்லியுள்ளது இது போகர் ஏழூத் தில் சேராத புதிய சாஸ்திரம் விலை அணு 0—12—0

புலஸ்தியர் கற்பம் 300.

இதில் கற்ப சாதனைகளின் விபரங்களையும் போக ஞான மார்க்கத்தையும் அகார உகார விபரங்களையும் வாசி யோகஞ் செய்யும் முறைகளையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாகக் கூறியுள்ளது ஓலை யேட்டுப் பிரதியிலிருந்து அச்சிட்டது புத்தகம் 1-க்கு விலை 0--10--0

புலஸ்தியர் வாதசூஸ்திரம் 300.

இந்த சாஸ்திரத்தில் ரசவாதத்துக்குரிய செம்பு வேதை, செம்புச் செந்தூரவேதை, தருசுச்செம்பு எடுக்கு விதம், கெந்தகதைலம் நாகரச கெந்தி தைலத்தின் பெருமையும் அதனால் மாற்று உயரும் முறையும் தங்க உரம், வெள்ளி உரம் செய்யும் முறைகளும் சரக்கு கட்டுவகைகளும், செந்தூரம், பஸ்பம், சுண்ணம், இவைகளை அது போக முறைகளாய்ச் செய்து கொடுத்து குணமாகும் வியாதிகளை ரெம்பவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

புத்தகம் 1-க்கு விலை ரூ 0—10—0

தன்வந்திரி வைத்தியக் குருநூல் 200

இதில் தன்வந்திரி பகவான் பாடிய சாஸ்திரத்திற்கெல்லாம் திறவுகோல் போல் ஷேயாரால் சொல்லிய சாஸ்திரத்தில் பற்பம், செந்தூரம், மாத்திரை, தைலம், சூரணம், சரக்குக்கட்டு வகைகளை எளிதாகச் செய்துகொள்ளக்கூடிய முறைகளாகத் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது. புஸ்தகம் 1-க்கு விலை அணை 0—8—0

நந்தீஸ்வரர் நிகண்டு 300

இதில் உப்பு இன்னதென்றும், வீரம், பூரம், வெள்ளைப் பாஷாணம் என்று சொன்ன சரக்குகளின்னதென்றும் அதனால் வகாரம் முடியுமென்றும், மூலிகை யென்ற சரக்குகளின் விபரமும், ஓம் என்றதின் பொருள் இன்னதென்றும் இன்னும் அநேக பரிபாஷைகளெல்லாம் விபரமாகச் சொல்லி யிருக்கிறது.

புஸ்தகம் 1-க்கு விலை அணை 0—8—0

சோலைமலை பெரிய அழகர் வர்ணிப்பு

இதில் சோலைமாமலையி லெழுந்தருளி யிருக்கும் அழகுமலை யாண்டாரின் அலங்காரச் சிறப்பும், குதிரையின் அலங்காரச் சிறப்பும், மலை விசேடமும், தீர்த்த விசேடமும், பதினெட்டாம்படி விசேடமும், மதுரைக்கு வந்து மண்டூக மாமுனிக்கு முத்திகொடுத்து வண்டியூர் சென்று திரும்பவும் அழகுமலை சென்ற முதலான சகல வைபவங்களையும் பத்து அவதாரங்களையும் வர்ணிப்புச் சந்தமாக யாவருக்கும் தெரியும்படி அலங்காரமாய்ச் சொல்லப் பட்டிருக்கிறது.

புஸ்தகம் 1-க்கு விலை அணா 0—3—0

பாகவத அம்மானை வர்ணிப்பு.

ஐயா நீங்கள் இதுவரையிலும் எத்தனையோ அநேக விதமான வர்ணிப்புகளை படித்திருந்தாலும் பெருமை பொருந்திய இந்தப் பாகவதஅம்மானை வர்ணிப்பை ஒருமுறை வாங்கிப் படிப்பீர்களானால் இனலங்காரம் தங்களுக்கே நன்கு தெரியும் தற்புகழ்ச்சியன்று அவசியம் வாங்கிப் படித்து உண்மையறியுங்கள்.

புத்தகம் 1-க்கு விலை அணா 0—6—0

கோடாங்கி மாலை. 1-2 பாகங்கள்

இது கோடாங்கி அடிப்பவர்களுக்கும், சுவாமி அருள் பொங்கிக் குறிசொல்பவர்களுக்கும் சுவாமி ஆடிகளுக்கும், ஆரூடம் சொல்பவர்களுக்கும், பேயோட்டுபவர்களுக்கும், முத்துக்குறி சோதிடம் பார்ப்பவர்களுக்கும் முக்கியமானது. பலதேவதைகளின் பெயர்களும் கிராமங்களின் பெயர்களும் குறிசொல்லுகிற விபரங்களும் ஆங்காங்கு தெளிவாக யாவரும் அறியும் வண்ணம் கூறியிருக்கிறது.

பாகம் 1-க்கு விலை அணா 0—4—0

அருணகிரிநாத சுவாமிகளால் இயற்றிய

பெரிய கந்தரனுபூதி

யந்திர மந்திர சக்கர பூஜாவிதிகளுடன் கூடியது.

புஸ்தகம் 1-க்கு விலை அணா 0—4—0